# அமைச்சர் கோவிந்தசாமி உடல் நிலை கவலைக்கிடம்

Registered as a News paper in Ceylon விலைசதம் 15 ★ ★

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 93
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 2 ஸபர் 27 வியாழக்கிழமை [15-5-69]

அருந்துங்கள்!
அன்னை
கோப்பி
அன்னை தொழிற்சாலை
இணுவில்

4-5-69 இதழில் ஆரம்பம்
அன்பே அனுராதா
விறுவிறுப்பான சித்திர தொடர்கதை
இன்றே வாங்குங்கள்
**மலர் விழி**
குடும்ப வார இதழ்
K. R. விஜயா எழுதும் தொடர்கதை
முன்கதைச் சுருக்கத்துடன் சிறியோர்
முதல் வயோதிபர் வரையும் படிக்க
வேண்டிய குடும்பப் பத்திரிகை.
**தமிழ்ப் பண்ணை புத்தக நிலையம்**
193, K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.
கிளை: 19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
11-4-69 மலர்விழியில் பெண்கள்
உலகம் பகுதியில் நடிகை விஜயகுமாரி
தொடர்ந்து எழுதுகிறார்.

சென்னை, மே. 14

தமிழ்நாடு உணவு விவசாய அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமியின் உடல் நிலை மிகவும் கவலையளிக்கக் கூடிய நிலையிலிருப்பதாக டாக்டர்கள் இன்று மாலையில் அறிவித்தார்கள்

திரு. கோவிந்தசாமியின் கல்லீரலும் சிறுநீரகமும் இயங்குவதில் பலவீனம் ஏற்பட்டிருப்பதாக டாக்டர்கள் விடுத்த அறிக்கை கூறியது. திரு. கோவிந்தசாமியின் உடல்நிலையில் சிறிது அபிவிருத்தி ஏற்பட்ட போதிலும் அபாய நிலையைத்தாண்டவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

திரு. கோவிந்தசாமி இரத்த வாந்தியின் காரணமாக சென்னை பெரியாஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து இரத்தவாந்தி ஏற்பட்டதால் டாக்டர்கள் அவருக்கு அறுவைச் சிகிச்சையளித்தார்கள். பின்னர் திரு. கோவிந்தசாமிக்கு அடிவயிற்றில் வலியும் வீக்கமும் கண்டது. இப்பொழுது அவரது உடல்நிலை மிக பலவீனமாய் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று அனேகமாக முழு இரவும் தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. மு, கருணாநிதியும் மற்றமந்திரிகளும் ஆஸ்பத்திரியிலேயே இருந்தார்கள். முதலமைச்சர் அடுத்த மூன்று தினங்களுக்குத் தமது அலுவல்களை ரத்துசெய்துள்ளார்.

# தமிழர் சிங்களத்தை போதனா மொழியாக ஏற்க முடியாது

## பௌத்த பாடசாலை விவகாரம் அமைச்சரின் சதி என்கிறார் அமிர்

யாழ்ப்பாணம், வியாழன்

**"எந்தப் பிள்ளைகளுக்கும் தாய்மொழியே போதனாமொழியாக இருக்க வேண்டுமென்பது அரசாங்கமும், பிரதமரும் ஏற்றுக்கொண்ட கொள்கை. இக்கொள்கையைப் புறக்கணித்து தமிழ்பேசும் மக்களுக்கு இந்நாட்டின் எந்தப்பகுதியிலும் சிங்களத்தைப் போதனாமொழியாக்குவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது."**

வட பகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க விருப்பதை ஆட்சேபித்து தமிழரசுக்கட்சி பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழரசுக்கட்சி பொதுச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் வெளியிட்ட அறிக்கை:

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருக்கும் 3 பௌத்த பாடசாலைக

அமைச்சரின் திட்டம். இதை அப்பாடசாலைகளில் படிப்பித்துவந்த ஆசிரியர்களோ, பிள்ளைகளோ அவர்களின் பெற்றோரோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இப்பாட

விதிவிலக்கு அளிப்பது சிறுபான்மை இனத்தவரால் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.

### கல்வி அமைச்சர் முதலைக் கண்ணீர்



## கூச்சல் குழப்பத்துடன் எழுதுவினைஞர் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் யாழ். கிளையின் வருடாந்தக் கூட்டம் நேற்று மாலை வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற போது ஆரம்பம் முதல் ஒரே கூச்சலும் குழப்பமும், கூக்குரலும் குறுக்கீடுமாக இருந்தது.

சுமார் அரைமணிநேரமாக நடந்த சூடான விவாதத்தின் பின்னர் முன்னாள் செயலாளர் திரு. ச. செல்லப்பா வெளிநடப்புச் செய்தார். சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறையில்லாமல், பொறுப்புணர்ச்சியின்றி, செயற்குழுவின் ஆலோசனையைப் புறக்கணித்து வந்த செயலாளர் திரு. செல்லப்பாவை செயற்குழு வெளியேற்றியது சரியெனக் கூட்டத்தில், கூடுதலான வாக்குகளால் தீர்மானிக்கப்பட்டது.

திரு. ஐ. ஜாதவராஜன் என்பவர் தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் தமிழ் அரசாங்க ஊழியர் பற்றி வெளியிட்ட கருத்து சம்பந்தமாக பேசியபோது கூட்டத்தில் சில நேரம் குழப்பம் ஏற்பட்டது. அரசியல் பேச வேண்டாமென ஒரு பகுதியினர் கூச்சலிட்டனர். அவரைப் பேசவிடுமாறு மற்றொரு கோஷ்டியினர் தெரிவித்ததால் அவர் தொடர்ந்து பேசினார்.

புதிய நிர்வாகசபை தெரிவில் தலைவராக திரு. ஆ. கார்த்திகேசுவும், செயலாளராக திரு. எஸ். பஞ்சலிங்கமும், உபதலைவர்களாக சி. துரைசிங்கம், கே. கந்தவனமும், உப செயலாளராக பி. கே. மகாலிங்கமும், பொருளாளராக திரு. ந. சண்முகநாதனும், 10பேர் கொண்ட கமிட்டியும் தெரியப்பட்டது. கூட்டத்தில் சுமார் 70 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

## கடிதம் தாமதித்ததால் பயிற்சி பெற முடியவில்லை

### சாவகச்சேரி பெண் டாக்டருக்கு ஏற்பட்ட அனுபவம்

மட்டுவில், புதன்

சாவகச்சேரி அரசாங்க ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பெண் டாக்டர் ஒருவருக்கு கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட முக்கிய கடிதம் அவருக்கு 7 நாட்களுக்குப் பின்னரே கிடைத்ததாம்.

த்தில் இம்மாதம் 5-ம் திகதி சமுகமளிக்கும் படியும் தவறினால் கொடுக்கப்பட்ட அரசாங்க உபகாரச்சம்பளம் அனுமதிக்கப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டிருந்ததாம். ஆனால் இந்த டாக்டரிடம் 13-ம் திகதியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் வெளியிட்ட அறிக்கை:

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருக்கும் 3 பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்று சிங்கள பௌத்த பாடசாலைகளாக்கவெடுத்திருக்கும் முடிவை ஒரு மதப் பிரச்னையாக்கிவிட சிலபத்திரிகைகளும், பௌத்த குருமார்களும் முயன்றுவருவது கண்டனத்திற்குரியது.



## தாய்மொழியே போதனமொழி

இப்பாடசாலைகள் நிறுவப்பட்டிருக்கும் பகுதிகளில் சிங்களத்தை தாய்மொழியாகக் கொண்ட மக்கள் எவரும் கிடையாது. எந்தப்பிள்ளைக்கும் தாய்மொழியே போதனமொழியாக இருக்கவேண்டுமென்பது அரசாங்கமும் பிரதமரும் ஏற்றுக்கொண்ட கொள்கை. இக்கொள்கையைப் புறக்கணித்து தமிழ் பேசும் மக்களுக்கு இந்நாட்டின் எந்தப்பகுதியிலும் சிங்களத்தை போதனமொழியாக்குவதை ஒருபோதும்ஏற்றுக்கொள்ளமுடியாது. இப்பாடசாலைகள் நிறுவப்பட்ட நாள் தொடக்கம், தமிழ் ஆசிரியர்களால் தமிழிலேயே கல்வி புகட்டப்பட்டுவந்துள்ளது. அரசாங்கம் பொறுப்பேற்றதும் அந்த ஆசிரியர்கள்வேலையையிழக்க தென்னிலங்கையிலிருந்துசிங்கள ஆசிரியர்களை அனுப்புவதேகல்வி இதை அப்பாடசாலைகளில் படிப்பித்துவந்த ஆசிரியர்களோ, பிள்ளைகளோ அவர்களின் பெற்ருரோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டது ஒரு சிலர் ஆசிரியர் வேலை தேடும் நோக்கத்திஞல்தான் என்பது நாடறிந்த உண்மை. அவர்களின் வயிற்றிலும் மண் போட்டு தமிழ்ப் பிள்ளைகள் மீது சிங்களத்தைத் திணிப்பதற்கு ஒரு சதித்திட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது. இந்தப் பாடசாலைகளுக்கு அருகாமையில் ஏற்கனவே தமிழ்ப் பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. இவற்றிலிருந்து பிள்ளைகளை எடுத்தே இப்புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

## சட்டவிரோத பாடசாலைகள்

1960-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கல்விச்சட்டத்தின்படி 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கும் பாடசாலைகளை தனியார் நிறுவுவது சட்டவிரோதமாகும். எனவே இப்பாடசாலைகள் நிறுவப்பட்டது சட்டவிரோதமாக இருக்கும்போது அவற்றை அரசாங்கம் பொறுப்பேற்றது, சட்டத்தை மீறுவதற்கு அரசாங்கமே உடந்தையாக இருப்பதாக முடியும்.

இந்நாட்டில் இந்துக்களோ முஸ்லிம்களோ கிறிஸ்தவர்களோ இப்படி மதசம்பந்தமான பாடசாலைகள் நிறுவுவது சட்டத்திஞல் தடுக்கப்பட்டிருக்கின்றது. பௌத்த சிங்கள பாடசாலைக்கு மாத்திரம் பான்மை இனத்தவரால் ஏற்றுக்கொள்ள முடியாத தொன்ருகும்.

## கல்வி அமைச்சர் முதலைக் கண்ணீர்

சிறுபான்மை தமிழர்களுக்கு உயர்சாதி தமிழர்களின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பளிக்கவே, தான் முன்வந்திருப்பதாக கல்வி அமைச்சர் காட்டிக்கொள்கிருர். 2 ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் முன்னேற்றமன்ற சார்பில் நாம் ஒரு தூதுக்குழுவை அழைத்துச்சென்று சாதி காரணமாக பின்தங்கிய தமிழ்மக்களுக்கு, ஆசிரியர் நியமனத்திலும், இடமாற்றத்திலும், மாணவர் கல்வியிலும், சலுகை வழங்கவேண்டுமென்று கேட்டபொழுது, அதற்கு முற்ருக மறுத்த அமைச்சர் இரியகொல்லை, இப்பொழுது, சிறுபான்மை தமிழருக்காக முதலைக் கண்ணீர் வடிப்பது எவரையும் ஏமாற்றமாட்டாது.

சிங்கள ஏகாதிபத்திய திணிப்பிற்கு, சிறுபான்மை தமிழர் பிரச்னையை ஒருகருவியாக கல்வி அமைச்சர் பயன்படுத்துகிருர்.

பௌத்த மதத்தை கற்க விரும்பும் பிள்ளைகள் எங்காவது இருப்பின் அதற்கு இப்போதிருக்கும் பாடசாலைகளிலேயே ஏற்பாடு செய்ய முடியும். அதுவும் தமிழ் பிள்ளைகளுக்கு தமிழ்மொழி மூலமே பௌத்தமதம் கற்பிக்கப்பட வேண்டும். ஒரே பாடசாலையில் இந்துசமயமும், கிறிஸ்தவ சமயமும், இஸ்லாமிய சமயமும் கற்பிக்க முடியுமாஞல் பௌத்த சமயத்துக்கு மட்டும் தனிப்பாடசாலை வேண்டும் என்று கேட்பது பகுத்தறிவிற்கு ஒவ்வாதது. உண்மையில் கல்வி அமைச்சரின் இனக்கொலைத் திட்டமே இங்கு செயல்படுகின்றது. சாதிப் பிரச்னையைத் தீர்ப்பதில், பிற்போக்குவாதிகள் எதிர்ப்புக்கு மத்தியில் தமிழரசுக் கட்சி உழைத்து வருகின்றது என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். நமக்கிடையில் சாதி வேற்றுமைகள் இன்னும் முற்ருக நீங்காவிட்டாலும் அந்நியர் வந்து புகுவதை எந்தத் தமிழனும்அனுமதிக்கமாட்டான். எனவே இப்பிரச்னையில்சாதி மதபேதங்களை மறந்து தமிழின் அடிப்படையில் ஒன்றுபட்டு எதிர்க்க வருமாறு எல்லாத் தமிழ் மக்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

கா. நி)

# கோப்பாயும் விபத்துகளில் முன்னணி வகிக்கிறது

யாழ்ப்பாணம், வியாழன்

அடுத்தடுத்து விபத்துகள் நடைபெறும் இடங்களில் இப்போது கோப்பாயும் முன்னணிவகிக்கத் தொடங்கியுள்ளதாம். இதற்குக் காரணம் பல திருப்பங்கள் கொண்ட வீதிகளுள்ள கோப்பாய்ப் பகுதியில் வாகனங்களை வேகமாகச் செலுத்துவதுதான் என்று பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இம்மாதம் 10ந் திகதி நடைபெற்ற பஸ் விபத்தொன்றில் கல்லூரி மாணவன் ஒருவன் மரணமானதும், இதற்குக் காரணம் பஸ்ஸை சாரதி வேகமாகவும், கவலையீனமாகவும் செலுத்தியதே என்றும் மரணவிசாரணை அதிகாரி தெரிவித்திருந்தது தெரிந்ததே.

இவ்விபத்து நடந்த அடுத்த நாளான 11ந் திகதி இங்கு மற்ருெரு கார்விபத்து நடைபெற்றது. இக்கார் விபத்திஞல் காயமடைந்த வைரமுத்து என்பவர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேகமாக வாகனங்களைச் செலுத்துபவர்கள்மீதுசட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஒழுங்குகளைக் கோப்பாய்ப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. தர்மபாலா மேற்கொண்டுள்ளார். (கா. நி.)



இடது பாதம் தூக்கி ஆடிஞர். இங்கே ஆடுவது செல்வி கீதாஞ்சலி சிவாஜிதுரை. ஈழத்திலும் தமிழகத்திலும் தனது ஆடல் கலையால் பாராட்டும் புகழும் பெற்ற இவரது நாட்டியத்தை இன்றுமாலை யாழ். நகரமண்டபத்தில் கண்டுகளிக்கலாம்.

# யாழ்ப்பாணத்தில் சென்னை ஆசிரியைகள்

யாழ்ப்பாணம், வியா.

சென்னை ஸ்ரீ சாரதா வித்யாலய பயிற்சிப் பள்ளிக்கூடம், மாடல் பள்ளிக்கூடம் இவற்றைச் சேர்ந்த 30ஆசிரியர்கள், திருமதிகள் ஸி. ஜானகி, ஏ.எஸ் ராஜம்மாள் இவர்கள் தலைமையில், ஈழத்தில் கதிர்காமம், கண்டி, நுவரேலியா முதலிய பல இடங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தனர். வேம்படிக்கல்லூரி முதலிய இடங்களுக்குச் சென்று நேற்று 'ஈழநாடு' காரியாலயததுக்கு விஜயம் செய்தனர். ஆசிரியை பி. சக்குபாய் புல்லாங்குழல் வாசித்தார். இன்று அவர்கள் கீரிமலை முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு, நாளை சென்னைக்கு திரும்பிச் செல்கிருர்கள். கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தார் பிரயாண ஒழுங்குகளையெல்லாம் வசதியாகச் செய்ததாயும், ஈழத்தையும், ஈழமக்களையும் கண்டதில் மிக மகிழ்ச்சியென்றும் தெரிவித்தனர்.

# இன்று ஆர்ப்பாட்டஊர்வலம்

யாழ்ப்பாணம், வியா.

மேதினத்தன்று சீன கம்யூனிஸ்ட் ஊர்வலத்தினர்மீது பொலிஸார் கண்ணீர்ப் பிரயோகமும் குண்டாந்தடிப் பிரயோகமும் செய்ததைக் கண்டிக்குமுகமான கூட்டமொன்றையும், ஊர்வலத்தையும் சீன கம்யூனிஸ்ட் கட்சியினர் இன்று யாழ்ப்பாணத்தில் நடத்துகின்றனர்,

இன்றுமாலை 6 மணிக்கு முற்றவெளியில் நடைபெறும் கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். டி. பண்டாரநாயக்கா எம். பி. எச். எல். வி. கரவிட்ட, ஐ. கரணகொட, மாதகல் வ. கந்தசாமி கே செந்திவேல், கே. டானியல் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஊர்வலத்தை சுன்னுகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மாலை 3 மணியிலிருந்து 6 மணிவரை நடாத்தப் பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர். எனினும் ஊர்வலத்தின்போது பொலிஸாரை இம்சிக்கும் எந்தவிதமான வார்த்தைகளையும் ஊர்வலத்தினர் கோஷிக்கக்கூடாதென கண்டிப்பான உத்தரவை பொலிஸ்சுப்பிரிண்டன்ட்விதித்துள்ளார்.

ஊர்வலத்தின் முன்னும் பின்னும் சுமார் 150 பொலிஸார் ஆயுதங்களுடன் கண்காணிப்புச் செலுத்திவரவும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. உதவி பொலிஸ் சுப்பிரின்டன்கள் ஜஞப் அசீஸ், என் என். டி. சில்வா ஆகியோர் தலைமையில் 5போலிஸ்இன்ஸ்பெக்டர்களின் நேரடிக் கண்காணிப்பில் பொலிஸார் இங்கு கடமைபுரிவார்களாம்.

இதற்கிடையில் இன்று காலை இங்குவரும் திரு. எஸ் டி. பண்டாரநாயக்கா, வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்தைச் சந்தித்துப் பேசவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (கா. நி.)

## லாபத்தில் 14 கூட்டுத்தாபனங்கள்

கோட்டை, புதன்

14 அரசாங்க கூட்டுஸ்தாபனங்கள் லாபத்தில் இயங்கிவந்துள்ளதாக 1967-68ம் வருட அறிக்கை யொன்று தெரிவித்துள்ளது.

இதில் சிமெந்து கூட்டுஸ்தாபனம் முதல் இடத்தையும் காகித ஆலை கூட்டுஸ்தாபனம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மட்டுவில், புதன்

சாவகச்சேரி அரசாங்க ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பெண் டாக்டர் ஒருவருக்கு கொழும்பிலிருந்துஅனுப்பப்பட்ட முக்கிய கடிதம் அவருக்கு 7 நாட்களுக்குப் பின்னரே கிடைத்ததாம்.

குறிப்பிட்ட டாக்டரை கயரோக சிகிச்சையில் விசேஷ பயிற்சிபெறுவதற்காக பங்களூர் பயிற்சிநிலைய இம்மாதம் 5-ம் திகதி சமுகமளிக்கும் படியும் தவறிஞல் கொடுக்கப்பட்ட அரசாங்க உபகாரச்சம்பளம் அனுமதிக்கப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டிருந்ததாம். ஆஞல் இந்த டாக்டரிடம் 13-ம் திகதியே கடிதம் கிடைத்ததாம்.

இதஞல் அவர் அங்கு செல்லமுடியாது போயிற்ரும்.

# 9 நாட்களுக்குப் பின் வாய்முறைப்பாடு எடுத்தனர்

யாழ்ப்பாணம், வியாழன்

இம்மாதம் 5-ம் திகதிபஸ் விபத்தில் சிக்கி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவரது வாய் முறைப்பாட்டைப் நேற்றே பதிவு செய்யமுடிந்தது. இதற்குக் காரணம் கடந்த 9 தினங்களாக இவர் அறிவிழந்த நிலையில் இருந்ததுதாஞம்.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த சின்னர் பொன்னம்பலம் (30 வயது) என்பவரே இவ்வாறு இம்மாதம் 5-ம் திகதி பஸ்விபத்தில் சிக்கி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவார்.

கிளிநொச்சியில் நடந்த கூட்டமொன்றிற்குச்சென்றுவிட்டுத் தான்வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இ. போ. ச. பஸ் ஒன்று தன்னை மோதிவிட்டு நிற்காமல் சென்று விட்டதாகவும், தான் நிலத்தில் வீழ்ந்த பின்னர் நடந்தது எதுவும் தனக்குத் தெரியாது என்றும் வாய்முறைப்பாட்டில் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிப் பொலிசாக விசாரணை செய்து வருகின்றனர். (கா. நி)

## தடை

புதுடில்லி, மே 14

அரசியல் கட்சிகளுக்கு தனிப்பட்ட கம்பனிகள் நிதி உதவி வழங்குவதற்குத் தடைவிதிக்கும் மசோதா இன்றுலோகசபையில் நிறைவேற்றப்பட்டது.

# சிங்களம் பௌத்தம் என்று தமிழ் இனத்தை அழிப்பதா?

## கல்லூரி பரிசளிப்புவிழாவில் யாழ். மேயர் கண்டனம்

யாழ்ப்பாணம், வியா.

'சிறுபான்மை இனத்தவர்க்குப் போதிய பாதுகாப்பளிக்கவேண்டியது பெரும்பான்மையினரின் கடமை. அப்படிச்செய்வதாகக்கூறும் பிரதம மந்திரியின் ஆட்சியில் மறைமுகமாக தமிழ் இனத்தை ஒழிக்க நடவடிக்கை எடுப்பது வேதனைக்குரியது. சிங்களம் படிப்பதும், பௌத்தர்களாக விரும்புவதும் அவரவர் சொந்த விஷயம். ஆஞல் இனத்தை அழிக்க எடுக்கும் முயற்சியையே நாம் கண்டிக்கிரேம்.'

இவ்வாறு யாழ். நகர மேயர் திரு சி நாகராஜா தேவரையாளி இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுபேசுகையில் குறிப்பிட்டார்,

பெற்ருேரும் மாணவர்களும் மற்ருேருமாகப்பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் மேயர் நாகராஜா மேலும் கூறுயதாவது:-

பண்பற்ற பத்தாம்பசலிக் கொள்கையான சாதிவேற்றுமையை அறவே பொது மக்கள்விழிப்புடன் செயலாற்ற வேண்டும் இல்லையேல் சமய வழிபாடு, கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களால் நமது இனத்துக்கு ஆபத்து வரும். பலாத்காரவழி நமக்கு நன்மை தராது. அகிம்சை வழிசென்றே நமது உரிமைகளைப் பெறலாம். அதுவே சிறந்த வழி. சமூகக் குறைபாடுகளை நீக்க இந்தியாவில் போல் இங்கும் பின்தங்கிய சமூகத்தவர்களுக்கு, கல்வி, வேலைவாய்ப்பு முதலியவைகளில் சலுகைகள்கொடுத்து அரசாங்கம் ஊக்கமளிக்கலாம். இதைவிடுத்து அரசாங்கம்நம்மைப் பிரித்துஆளப் பார்க்கிறது. பின்தங்கியசமூகத்தினருக்கு உதவிகொடுப்பதாகப் போலி வேடம் போட்டு, எமது மத்தியில் குழப்பத்தையும் பூசல்களையும் வேற்றுமைகளையும் வளர்க்கப்பார்க்கிறது அரசாங்கம். சிங்களப் பள்ளிக்கூடங்களை எமது மத்தியில் ஆரம்பித்து அவைகளை அரசாங்கம் பொறுப்பேற்கமுற்படுவது கபடத்தனம். சிங்கள பௌத்த பள்ளிக்கூடங்களை நடத்த முற்படுவது நயவஞ்சகமான செயல். இதை நாம் கண்டிக்க வேண்டும், தமிழ் மககளை சிங்களவர்களாக, பௌத்தர்களாக மாற்றுவது இதன் நோக்கம். சிங்களம் படிப்பதும் பௌத்த மதத்தைத் தழுவுவதும் அவரவர் விருப்பம். ஆஞல் இனத்தை அழிக்கும்செயலை ஒரே குரலில் எதிர்த்து நிற்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வள்ளச்சாலையில் தச்சுத் தொழிலாளர்களும், வள்ள வேலை பயில்வோரும் உடன் தேவை. பயில்வோருக்கும் வேதனம் வழங்கப்படும். விண்ணப்ப மூலமோ, நேரிலோ தொடர்பு கொள்ளவும். அதிபர், செல்வம் வள்ளச்சாலை, முல்லைத்தீவு. 1113

நுவரெலிய பகுதியில் ஒரு தியேட்டருக்குபிணைப்பணம் கட்டக்கூடிய மனேஜர், உதவி மனேஜர், ஒப்பரேட்டர், புக்கிங்கிளாக், ''செக்கர்'' தேவை. அடுத்தமாதம் தியேட்டர்தொடங்கவிருப்பதால் விண்ணப்பங்களை 19-5-69க்கு முன் அனுப்பவும். விளம்பர இல. 1125, மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம் 1125

சாரதி:

யாழ்ப்பாண நகரிலுள்ள டாக்டருக்கு 15 வருட அனுபவமுள்ளவரும், இரவில் தங்கக்கூடியவருமான சாரதி ஒருவர் தேவை. சம்பளம் 100 ரூபாவும், உணவும். 3 நற்சாட்சிப்பத்திரங்களுடன் உம்மைப் பற்றிய விபரம் தெரிந்தவர் இருவரின் பெயர் விலாசத்தையும் இணைத்து உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1119, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1119

### விற்பனைக்கு

கார்:

ஒஸ்ரின் கேம்பிறிட்ஜ் A 50 நம். 1 ஸ்ரீ 9253. தனிநபரால் பாவிக்கப்பட்டது. மிக நல்ல நிலையிலுள்ளது. ரூபா 24,000/-க்கு மேல் எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்புகொள்ளவும். எஸ். இராமநாதன், பொறுப்பதிகாரி, தேசிய லொத்தர்சபை, யாழ்ப்பாண ஐக்கியவியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம். 1122

பெர்கூசன் ராக்றர் 25ஸ்ரீ வரிசையில் கலப்பையுடன் வான்காட் பிரயாணிகள் வான் 3ஸ்ரீ வரிசையில் விற்பனைக்கு உண்டு. வி. பஞ்சலிங்கம், பாலாவோடை, காரைநகர். 1014

### வாடகைக்கு

நல்லூர் மார்க்கட்டுக்கு அருகாமையில், ஆடியபாதரோடியிலுள்ள 280 இலக்க வீடு வாடகைக்கு உண்டு. மின்சார வசதியுமுண்டு. விபரங்களுக்கு ஆயுர்வேத டாக்டர் பரமானந்தம், 16, அரசவீதி, நல்லூர். 1112


REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m.
Pre-Poya, Poya 4 Shows
Mich el Caine, Sue Lloyd
in
The Ipcress File
(Adu ts)

MANOHARA
JAFFNA
Daily
2-30 6-30 & 9-30 P.M.
Pre-Poya Poya 4 Shows
Asah Parekh, Manoj Kumar
in
DO BADAN
(Eastman color)


## ஆராய்ந்தார்

திருக்கோணமலை, புதன்

லங்கா சீனிக் கூட்டுத்தாபனத்தின் உதவிப் பொது முகாமையாளர் கந்தளாயிலுள்ள தமது அலுவலகத்திலிருந்து தம்பலகமம், கந்தளாய், கிண்ணியா ஆகிய இடங்களிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கரும்பு அறுவடையின்போது தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் வேலைகள் பற்றி ஆராந்தார்.


ராஜா 122வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
எம். ஜி. ஆர்.
அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி
(புத்தம் புதிய கொப்பி)

ராணி
ஜெய்சங்கர்


## ''கலாசாலை முன்னேற்றம் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்''

### கோப்பாய் ஆசிரியபயிற்சிக்கலாசாலையில் பதில் கல்வி மாஅதிபதி

கோப்பாய், புதன்

''மாணவரின் வளர்ச்சிக்கு கல்வியுடன் விளையாட்டுத் துறையும் அவசியமாகும் எனவே ஆசிரியர்கள் கல்வியையும் விளையாட்டுக்களையும் ஒருமித்துக் கற்பிக்கவேண்டியது அவசியம்'' என கோப்பாய் அரசாங்க மகளிர் ஆசிரியகலாசாலை வருடாந்த மெய்வல்லுனர் போட்டிப் பரிசளிப்பு வைபவத்தில் பிரதமவிருந்தினராக கலந்து பேசுகையில் பதில் கல்வி மா அதிபதி திரு. டி. எம். ஹெட்டியாராச்சி கூறினார்.

கலாசாலை அதிபர் திருமதி ஆனந்தகுமாரசாமி தலைமையில் கலாசாலை விளையாட்டு முன்றலில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. ஹெட்டியாராய்ச்சி மேலும் பேசுகையில் நீண்டகால இடைவெளிக்குப் பின் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இக் கலாசாலை பலதுறைகளிலும் காலத்துக்காலம் முன்னேறுவது குறித்துப் பாராட்டுகிறேன். இங்கு பயிற்சி பெறும் ஆசிரியைகள் பயிற்சி முடிந்து வெளியேறி பதவியேற்கும் பாடசாலைகளில் தாங்கள் கற்ற கல்வியுடன் விளையாட்டுத்துறையையும் நல்லமுறையில் கற்பித்து இளைஞர் சமுதாயத்தை வளர்க்க உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்'' என்றூர். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ரேருக்கு திரு. ஹெட்டியாராச்சி பரிசுகளை வழங்கினுர்.

இப்போட்டியில் சுவர்ணு இல்லம் முதலாவது இடத்தையும், இராதா இல்லம் இரண்டாவது இடத்தையும் அருணுஇல்லம் மூன்ருவது இடத்தையும் பெற்றன.

## நாடெங்கும் வேட்டை

கோட்டை, புதன்

பொலிஸ் குற்றவிசாரணைப் பிரிவு கொள்ளை, திருட்டு, ஆயுதங்களால் தாக்கிக் காயப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களெனக் கருதப்படும் எட்டுப் பேரைக் கைதுசெய்வதற்கு நாடெங்கும் தேடுதலில் ஈடுபட்டுள்ளது.

## மயிலிட்டிக் கிராமசபையின் கேள்வி விளம்பரம்

மயிலிட்டிக் கிராமசபைத் தலைவரால் கட்டுவன் தெற்கு (17-ம் வட்டாரம்) ஆள்விழுந்தான் ஒழுங்கைத் திருத்த வேலைக்கு 30-5-69 காலை 9-30 மணி வரைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள், ரெண்டற்பிணை ரூபா25/-ம், கேள்விப்பத்திரச் செலவு ரூ. 10/-ம் கட்டிக் கிராமசபைக் கந்தோரில் 27-5-69 பிற்பகல் 3 மணிவரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கொண்டு இவ்வேலை பற்றிய விபரத்தை கிராம சபையில் வேலைநேரங்க

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 15—5—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன் 49 மீ.**

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 கல்விஒலிபரப்பு, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன் 61 மீ.**

மாலை 4-30 செய்திச்சுருக்கம், [illegible]-35 மெல்லிசை, 5-00 [illegible]செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடி விளையாடு பாப்பா, 5-45 படப்பாட்டு [illegible] இரவு [illegible] ப யி[illegible] 6-30 கிராம [illegible] 7-00 [illegible]

## 'இந்திய ஜனநாயகம் இலங்கைக்கு ஒரு பாடம்'

### ஹுசேன்அனுதாபக்கூட்டத்தில் பேச்சு

திருகோணமலை, புதன்

இந்தியநாடு 20 வருடங்களுக்குள் தனது 3வது ஜனுதிபதியை சிறுபான்மையினரில் இருந்து தேர்ந்தெடுத்தது. இந்தியமக்கள் ஜனநாயகத்தை எவ்வளவு புனிதமாகப் போற்றிப் பேணிவருகின்றனர் என்பதற்கு இது ஒரு நல்ல சான்ருகும். இந்தப்படிப்பினை இலங்கைக்குக் கூட ஒரு பாடமாக அமையட்டும்.

இவ்வாறு திருமலை அர்ச் சூசையப்பர் கல்லூரி அதிபா வணபிதா கேபர்ட் மறைந்த இந்திய ஜனதிபதி டாக்டர் சாகிர்ஹுசேனின் ஞாபகார்த்தமாக நடைபெற் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த கலாநிதி எஸ் சிவானந்தன் பேசுகையில் கூறியதாவது:- டாக்டர் ஹுசேன் அவர்கள் இந்தியமக்களின் ஐக்கியத்திற்காகப் பாடுபட்டஒருவர் கல்வியில் மேதாவியாகிய டாக்டர் அவர்கள் 20வருடகாலமாக பல்கலைக்கழக உபவேந்தராக கடமையாற்றியுள்ளார். அவர்எப்போது உலகத்தைத் தமது வீடாகவும் உலகெங்குமுள்ள மக்கள் அனைவரும் தமதுகுடும்பத்தினராகவும் கருதி நடந்தார். மூதூர் இரட்டைத் தொகுதியின் இரண்டாவது அங்கத்தவரான திரு.ஏ.எல் ஏ. மஜீத் பேசுகையில் டாக்டர் அவர்கள் ஒரு பெரும் ராஜ தந்திரி பரந்தமனப்பான்மையுள்ள ஒரு பெரியவர் அவர் ஒருசிறந்த முஸ்லீமகா இருந்து தன்னுடைய மதம் தன்னுடைய நாடு இவற்றைப் பெரிதும் மதித்து உலகத்திற்கே ஒரு முன்னேடியாகத் திகழ்ந்தார் என்று குறிப்பிட்டார்.

## நீல இல்லம் முதலிடம்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி கீழ்ப் பிரிவு மாணவ மாணவிகளின் விளையாட்டுப் போட்டி[illegible] நீல இல்லம் 147 பு[illegible] களைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது.

தங்க இல்லம் 144 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், பச்[illegible] இல்லம் 112 புள்ளிக[illegible]

## உரும்பராய் இந்து சாரணர் குழு 10-வது ஆண்டு விழா

உடும்பராய், புதன்

உரும்பராய் இந்துக்கல்லூரி சாரணர் குழுவின் பத்தாண்டுவிழா இன்று வியாழக்கிழமை மாலை 4-15மணி தொடக்கம் நடைபெறும்

இலங்கைச் சாரணப் பிரதம ஆணையாளர் திரு. விற்ஸ்ரேய் எச் குணசேகரா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

வடமானில வித்தியாதிபதி திரு. தணிகாசலம் 4-30 மணிக்கு சாரணர் பொருட்காட்சியைத் திறந்து வைப்பார். கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறும்,

## போட்டியின்றி தெரிவு

அராலி, புதன்

அராலி கிராமசபையின் பதின்மூன்ரும் வட்டார அங்கத்தவர் திரு. க. சுப்பிரமணியம் தமது பதவியை ராஜினுமாச்செய்ததைத் தொடர்ந்து காலியான இடத்திற்கு திரு.எஸ். குலசேகரம்பிள்ளை இன்று காலை தமது நியமனப்பத்திரத்தை தேர்தல் அதிகாரி திரு. கந்தசாமி முன் சமர்ப்பித்தார். போட்டியில்லாமையால் அவர் அராலி கிராமசபை அங்கத்தவராக தெரிவுசெய்யப்பட்டார்.

## நெல்லியடி பாஷையூர் மோதல்

பருத்தித்துறை, புதன்

நெல்லியடி ஸ்பேஸ் கழகமும், பாஷையூர் சென்.அன்ரனிஸ் கழகமும் இன்று ஒரு சிநேகபூர்வமான உதைபந்தாட்டத்தில் மோதவிருக்கின்றன். இப் போட்டியில் இரு கோஷ்டிகளிலும் பாங்கொக் சென்றகே ஸ்ரீதரன், பிரான்சிஸ் என்போர் கலந்து கொள்ள விருக்கின்றனர். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடக்கவிருக்கும் இப் போட்டியில் உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழா மாணவர் பேச்சுப் போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கீழே குறிப்பிடப்படும் விபரத்தின் பிரகாரம் ஒரு பேச்சுப்போட்டி நடைபெறும்.

**3 பிரிவுகள்:**

சிரேஷ்ட பிரிவு 1-6-69-ல் 19 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு.

மத்திய பிரிவு 1-6-69-ல் 16 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு.

கனிஷ்ட பிரிவு 1-6-69-ல் 12 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு.

### பேச்சுக்கான விடயங்கள்:

**சிரேஷ்ட பிரிவு**

1. மக்களும் பத்திரிகைகளும். 2. தேசிய ஒற்றுமை. 3. விஞ்ஞானக்கல்வி. 4 வண. ஞானப்பிரகாசர். 5. 'ஈழநாடு' பத்திரிகை. 6. இஸ்லாமும் தமிழும். 7. கூட்டுறவும் பொருளாதார நலனும்.

**மத்திய பிரிவு**

1. உணவுஉற்பத்தி. 2. பத்திரிகையும்வாழ்க்கையும். 3. சுவாமி விபுலானந்தர். 4. 'ஈழநாடு' பத்திரிகை. 5. உமறுப் புலவர். 6. இலங்கையின் கைத்தொழில் விருத்தி.

**கனிஷ்ட பிரிவு**

1. காந்திமகான். 2. ஆறுமுக நாவலர். 3. 'ஈழநாடு' பத்திரிகை. 4. உடற்பயிற்சி. 5. எமது நாடு. 6. நபிகள் நாயகம்.

விண்ணப்பங்கள் யாவும் 'ஈழநாடு' மாணவர் பேச்சுப்போட்டிக் கூப்பனில் நிரப்பப்பட்டு, தாங்கள் பயிலும் கல்லூரி அதிபர் மூலம் 'ஈழநாடு', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 20-5-69-ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் **10-வது ஆண்டு நிறைவு விழா பேச்சுப் போட்டி** என்று குறிப்பிடுதல் வேண்டும்

இப்பேச்சுப்போட்டி சம்பந்தமான பரிசு முதலிய விபரங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**'ஈழநாடு' 10-வது ஆண்டு விழா**

**மாணவர் பேச்சுப் போட்டி**

பெயர்: ........................................

விலாசம்: ........................................

........................................

பிரிவு: ........................................

## பஸ்சேவை சீர்கேடு

கேகாலை, புதன்

கேகாலை டிப்போவிலும், மாவனெல்லை டிப்போவிலும் பழுதடைந்த இ. போ. ச. இவற்றைத் திருத்தி திரும்பவும் வேலைக்குவிடும் வேலை துரிதமின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனுல் இப்பகுதி மக்கள் கஷ்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
* ஜெய்சங்கர்
* விஜயகுமாரி
நடித்த
# ஜீவனம்சம்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ ஜெயலலிதா
நடித்த
# கலாட்டா கல்யாணம்

கிங்ஸ்லி (கொழும்பு) அயின் (மன்னார்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
நாகேஷ் - சுந்தரராஜன்-வசந்தா- மனோரமா
நடித்த
# ஆலயம்

இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் பிளாஸா மைலன்
(கொழும்பு)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) வெலிங்டன் (யாழ்நகர்)



ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்
நடிக்கும்
# அதே கண்கள்

பற்றிய விபரத்தை கிராம சபையில் வேலை நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்) வ. கிருஷ்ணசாமி,
தலைவர்,
கிராமசபை மயிலிட்டி.
கிராமசபை அலுவலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை, 12-5-69.
1576

இணுவில்
## ஸ்ரீ காலிங்கன்
Daily 4-45, 7-00, & 10-00 p. m
John Mills-Hugh O'Brin
in
**Cowboy in Africa**
[Technicolor]
(2nd Part of Hatari)


இரவு 6-15 இசைப் ப... 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 வயலினிசை, 7-35 குறுக்கெழுத்துப் போட்டி, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

......

## தையல் வகுப்பு

சுழிபுரம், புதன்
சங்கரத்தை மாதர் முன்னேற்றச் சங்கத்தினர் அரசாங்கத்தின் உதவியுடன் இலவச தையல் வகுப்பை நடாத்திவருகின்றனர்.

பிரமாண்டமான
# ஏலவிற்பனை




மே 16-ந்திகதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு
பிரமாண்டமான ஏல விற்பனை
யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில்
## 17 கட்டிடக் காணிகள் 17
மாநகரசபைஎல்லைக்குள் கொழும்புத்துறை
ரோட்டுக்கு சிறிது அப்பால் ஆனால் ஓரமாக
O சுண்டிக்குளி மகளிர்கல்லூரி, O சென்ஜோன்ஸ்கல்லூரி
பாடசாலைகளிலிருந்து 1/4 மைல் தூரத்தில்
O பஜார் O கச்சேரி O கோவில்கள் O தேவாலயங்கள்
முதலியவற்றிற்கு மிக அண்மையில்,
மின்சார வசதியும்
தண்ணீர் விநியோக சேவையும் உண்டு. நல்ல உறுதி
உறுதியும், படமும், இந்தக் கந்தோரின் புரக்டர்களும்,
நொத்தாரிசுகளுமான மெஸர்ஸ் கொடிகார &
அபெயநாயக்கா அவர்களிடம் உண்டு.
டக்ளஸ் சி. குரேரா, ஏலதாரர்.
## புரொப்பட்டி சேல்ஸ் லிமிட்டெட்
O ஏலதாரர்கள் O தரகர்கள் O கட்டிடக்காரர்கள்
279, யூனியன் பிளேஸ் :: :: கொழும்பு.
போன்: 25155
1562

...களைப் பெற்று இரண்டாவது இடத்தையும், பத்... இல்லம் 112 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும், 96 புள்ளிகளைப் பெற்று சிவப்பு இல்லம் நான்காவது இடத்தையும் பெற்றன. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கல்லூரி உப-அதிபர் வி. கே. தியாகராசபிள்ளை பரிசுகளை வழங்கினார். தலைமையாசிரியர் திரு. எஸ். பென்னையா. நன்றியுரை கூறினார்.

— —

## தையல்பயிற்சி வகுப்பு

உடுப்பிட்டி, புதன்
கரவெட்டியிலுள்ள கப்பூது என்ற இடத்தில் அரசினர் தையல் பயிற்சி வகுப்பை உப-சபாநாயகர் திரு எம். சிவசிதம்பரம் திறந்து வைத்தார்.

கிராமமுன்னேற்ற சங்கத் தலைவர் திரு. ஏ. தில்லையம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சிவசிதம்பரம் பேசுகையில் கிராமத்தில் வாழும் பெண்கள் உழைத்து குடும்ப பொருளாதாரத்தை வளர்க்கவேண்டும் என்று கூறினார்.

— —

## அப்பாக்குட்டி இல்லம் முதலிடம்

யாழ்ப்பாணம், வியா
இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் விளையாட்டு வீரர்களாகவும் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்கள்:

மேற்பிரிவு: செல்வன் சி. கருணாமூர்த்தி, மத்திய பிரிவு: செல்வன் வ. விஜயரத்தினம், கீழ்ப்பிரிவு ஆ. புஷ்பலிங்கம், ஆரம்பபிரிவு: ந. குகதாசன்.

பெண்கள்:

மேற்பிரிவு: செல்வி ந. நடேஸ்வரி, மத்தியபிரிவு: செல்வி சோ. தவநேருமலர் செ மகேஸ்வரி, கீழ்ப்பிரிவு: செல்வி: வ. உருக்குமணி தேவி, ஆரம்ப பிரிவு; அ. கலாராணி

அப்பாக்குட்டி இல்லம் முதலாம் இடத்தையும் பொன்னையா இல்லம் இரண்டாம் இடத்தையும் மயில்வாகனம் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

...நாயகர் திரு. மு. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

—

## ச. ச. நிலைய ஆண்டு விழா

உடுவில். புதன்,
அளவெட்டி மேற்கு சனசமூக நிலைய மூன்றாவது ஆண்டுவிழா நிலைய முன்றலில அடுத்தவாரம் கொண்டாடப்படவிருக்கிறது. பண்டிதர் திரு. க. நாகலிங்கம் தலைமையில விழா நடைபெறும். விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நிர்வாகசபையினர் திருவாளர்கள் வை. செலலையா, இ. சிவகுருநாதன். ச. செலலத்துரை ஆகியோர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

...கேகாலை, புதன்
கேகாலை டிப்போவிலும், மாவனெல்லை டிப்போவிலும் பழுதடைந்த இ. போ. ச. பஸ்கள் நிறைந்துள்ளன.

...பவும் வேலைக்குவிடும் வேலை துரிதமின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால், இப்பகுதி மக்கள் கஷ்டமடைவதோடு மிகக்குறைந்த பஸ்களே ஓடுகின்றன. பஸ் தரிப்பு நிலையங்களில் பிரயாணத்துக்காக காத்துநிற்கும் மக்கள் தொகையும் அதிகரிக்கிறது. இப் பகுதியில் சேவைக்கு விடப்பட்ட பஸ்கள் பழையனவாகையினாலேயே அடிக்கடி பழுதடைகின்றன எனப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கப்ஸ்டன்
## சிகரெட்டுகளை வாங்குங்கள்
அவை நல்ல புகையிலைக் கலவை கொண்டவை
சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்
GRANT-35-83-69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேஷிய இனக் கலவரங்களில் 50 பேருக்குமேல் பலி

## கோலாலம்பூரில் ஊரடங்குச் சட்டம் அமுல்

### மலாயர்-சீனர் தெருக்களில் ஆர்ப்பாட்டம்

### அமைதியை நிலைநாட்ட துங்கு அவசர நடவடிக்கை

கோலாலம்பூர், மே 14

**சீனர்களும் மலேஸியர்களும் நேற்று முழுநாளும் கோலாலம்பூர் தெருக்களில் கம்பிகளாலும் கத்திகளாலும் மோதிக்கொண்டார்கள். இந்த மோதலின் காரணமாகக் குறைந்தது ஐம்பது பேராவது கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.**

கோலாலம்பூர் நகரில் ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. தலைநகருக்கருகாமையிலுள்ள சிலாம்பூரில் நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மலேஸிய பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் அமைதியாய் இருக்கும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

அவசியமானால் நாடு முழுவதிலும் நெருக்கடி நிலைமையைப் பிரகடனப்படுத்தப்போவதாகவும் அவர் அறிவித்துள்ளார். நிலைமை இப்பொழுது கட்டுக்குள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலாய் சீனர்களுக்கும் மலேஸியர்களுக்குமிடையில் நேற்று முழுநாளும் கோலாலம்பூரிலும் அதைச்சுற்றியுள்ள நகரங்களிலும் சண்டை நடைபெற்றது. கம்புகளையும் கத்திகளையும் கைகளில் பிடித்தபடி பலர் தெருக்களில் சுற்றித்திரிந்தார்கள்.

நிலைமையைக் கட்டுப்படுத்தப் பொலிசார் அழைக்கப்பட்டனர். பொலிசாருக்கு உதவியாக ராணுவமும் அழைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து துப்பாக்கிகள் சுடப்படும் ஓசை கேட்டது.

கலவரங்களின் காரணமாக 20 பேர் கொல்லப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் ...

...ஸிய சீனர் சங்கம் படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து நாட்டில் பதற்றம் இருந்துவந்தது. தேர்தலில் இந்தச் சங்கம் 33 இடங்களில் போட்டியிட்டு 20 இடங்களில் தோல்வியுற்றது. இதில் இரண்டு சீன மந்திரிகளும் தோல்வியுற்றனர். ராஜ்யங்களில் நடந்த தேர்தலில் இதன் 84 வேட்பாளர்களில் 54 பேர் தோற்றனர். இதனால் மலேஸிய மந்திரிசபையில் சீனர் எவரும் இடம்பெறமுடியாத நிலை ஏற்பட்டது. தேர்தலில் ஏற்பட்டதோல்வியைத் தொடர்ந்து மந்திரிசபைக்கு தங்கள் கட்சியின் சார்பில் எவரையும் நியமிக்கப்போவதில்லையென்றும், ஆளும் கட்சிக்கு ஆதரவு தரப்போவதில்லையென்றும் சீனர்கள் சங்கம் அறிவித்தது. அத்துடன் மந்திரிசபையில் சீனர்களுக்கு இடம் தரக்கூடாதென்றும் ஆளும் கட்சிப்பிரமுகர்கள் சிலர் பிரதமர் துங்கு அப்துல் ரகுமானைக் கேட்டுக்கொண்...



கலவரங்களில் ஏராளமானவர்கள் காயமுற்றார்கள். இரத்ததானம் செய்யும்படி மலேஸிய வானொலி நேற்று முழுவதும் பொதுமக்களுக்கு...

## கென்னடி சுடப்பட்டதும் மகிழ்ச்சியால் ஆடினாராம்

### மரணவிசாரணை அதிகாரிபற்றி புகார்

லொஸ்ஏஞ்சல்ஸ், மே 14

செனட்டர் கென்னடி சுடப்பட்ட செய்தி கேட்டதும் அப்பொழுது லொஸ் ஏஞ்சல்ஸ் நகர மரணவிசாரணை அதிகாரியாய் இருந்த தோமஸ் நொகுச்சி என்பவர் மகிழ்ச்சியால் கூத்தாடினாராம். இத்தகவல் இங்கு நடைபெறும் விசாரணையொன்றின் போது தெரிவிக்கப்பட்டது.

"நான் பிரபல்யமாகப் போகிறேன். அவர் சாவார் என்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் அவர் செத்தால் எனக்கு சர்வதேசப் புகழ் ஏற்பட்டு விடும்" என்று அந்த மரண விசாரணை அதிகாரி தமது அலுவலக ஊழியர்களிடம் கூறினாராம். இத்தகவலை சிவில் சேவைக் கமிஷன் ஒன்றின் முன் வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார்.

செனட்டர் கென்னடியின் மரணவிசாரணையை நடத்திய இந்த அதிகாரி போதைப் பொருள் உட்கொண்டபின் அழிவுகள் ஏற்படவேண்டுமென்று பிரார்த்தனைகள் செய்ததாக பின்னர் வேலைநீக்கம் செய்யப்பட்டார். அதனை எதிர்த்து அவர் மேற்படி கமிஷனிடம் மனு செய்துள்ளார்.

கஸாகிஸ்தான் பகுதியில்

## சோவியத் பிரதேசத்தில் சீனர் புதிய ஆக்கிரமிப்பு

மாஸ்கோ, மே. 14

சோவியத் யூனியனில் கஸாகிஸ்தான் பகுதியில் சுமார் ஆயிரம் சீனத் துருப்புகள் உட்புகுந்து சுமார் 15 மைல் பரப்புள்ள பிரதேசத்தைக்கடந்த பத்துநாட்களாக வசப்படுத்தி வைத்திருப்பதாகக் கூறப்படு... கிஸ்தான் பிரதேசத்தில் சுமார் 15 சதுர மைல் பிரதேசத்தைத் தம்வசப்படுத்திக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால் அதிகார பூர்வமாக இது ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

உசூரி ஆற்றில் ...கரையிலுள்ள டமான்ஸ்கிதவிலும் இந்திய போர்மோஸா எல்லைப் பகுதிகளிலும் சீனத் துருப்புகள் ரோந்து நடவடிக்கைகளில் இறங்கியிருப்ப...

## பிரிட்டனில் சர்வதேச பொருளாதார கருத்தரங்கு

### இலங்கையும் பங்குபற்றுகிறது

லண்டன், மே 14

தென்இங்கிலாந்தைச்சேர்ந்த் பிரைட்டன் நகரில் பொருளாதார திட்டமிடுதல் பற்றிய சர்வதேச கருத்தரங்குஒன்றுநேற்று ஆரம்பமாகியது. சர்வதேச நிதியுதவிகளையும், உள்நாட்டு இயற்கைவளங்களையும் கொண்டு அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளின் எதிர்கால பொருளாதாரச்சுபீட்சத்திற்கு வழிவகைகள் காண்பதுபற்றி ஆராய்வதே இந்த கருத்தரங்கின் நோக்கமாகும்.

சுஸெக்ஸ் சர்வகலாசாலையைச் சேர்ந்த அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனம் ஒழுங்குசெய்துள்ள இந்தக்கருத்தரங்கு ஐந்து வாரங்கள் வரை தொடர்ந்து நடைபெறும். இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்துவரும் இந்நாடுகளின் பிரதிநிதிகள் இத் கருத்தரங்கில் பங்குபற்றி வருகிறார்கள். இலங்கைப் பிரதிநிதியாக கமச் சேவை உதவி இணையாளர் திரு. ஈ. ஜே. டி. சில்வா இக்கருத்தரங்கில் கலந்து கொள்கிறார்.

இந்தக் கருத்தரங்கின் போது நிதியுதவி வழங்கும் நாடுகளையும் ஏஜென்ஸிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் ஆராய்ச்சி சொற்பொழிவுகள் நிகழ்த்துவர். ஒரு திட்டத்தை மதிப்பிட்டு அதனைப் பூரணமாக நிறைவேற்றும் வழிவகைகள்பற்றி இவ்வுரையின்போது விளக்கப்படும். இதன்பயனாய் ஒரு நீண்டகால சமூக, பொருளாதார திட்டத்தைவெற்றிகரமாகச் செயல்படுத்தும் மார்க்கங்கள் பற்றி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அறிந்துகொள்வார்கள்.

### எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

அச்சுவேலி கொலைவழக்கில், மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி எதிரிகள் மூவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் அச்சுவேலியைச் சேர்ந்த தவராஜா என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாகவும், ஆர். குலசிங்கம் என்பவரைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் அதே ஊரைச் சேர்ந்த எஸ். அன்னராசா, கே. கணேசன், எஸ். தவநாதி ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

### கண்டனம்

வெள்ளவத்தை, புதன்.

'ஈழத்து எழுத்தாளர்கள் சுய ஆற்றல் அற்றவர்கள். தமிழகத்தின் ஏடுகளைப் பார்த்துக் காப்பியடித்து எழுதுகிறார்கள்' என்ற திரு. பகீரதன் கூற்றை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். மிகவும் பொறுப்பு வாய்ந்த எழுத்தாளர்கள் இப்படியாக உளறிக் கொட்டியிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். சகோதரர்களைப் போலப்பழகிப் பரஸ்பர ஆதரவையும் ஒற்றுமையையும்...

### எதிரி விடுதலை

அளவெட்டி, புதன்

கல்லால் எறிந்து காயம் விளைவித்த வழக்கில் எதிரியை மல்லாகம் நீதிபதி விடுதலை செய்தார்.

வளலாயைச்சேர்ந்த எஸ் சின்னையா என்பவர் தம்மை கல்லால் எறிந்து காயம் விளைவித்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த டி. செல்வநாயகம்மீது மல்லாகம் நீதிமன்றத்தில்...

## இளம் பாடகர்க்கு ஒரு சந்தர்ப்பம்

கோட்டை, புதன்

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் ஸ்ரீ தியாகராஜசுவாமிகள் உற்சவம் தமிழிசைவிழாவில் இளம் பாடகர்களுக்கென பரிசுப்போட்டி ஒன்றை நடாத்த இலங்கை தியாகராஜகான சமாஜத்தினர் முடிவு செய்துள்ளனர்.

அடுத்த மாதம் 25-ந் திகதி முதல் 27-ந் திகதி வரை தமிழிசைவிழாவும், 28, 29-ந் திகதிகளில் ஸ்ரீ தியாகராஜ உற்சவமும் வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் கொண்டாடப்படவிருக்கிறது.

இளம் பாடகர்களுக்கான பரிசுப்போட்டி சமாஜத்தார் நியமிக்கும் மத்தியஸ்தர்கள் முன்னிலையில் நடைபெறும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு இசைவிழாவில் பாட சந்தர்ப்பம் அளிக்கப்படுவதுடன் விழாவின் கடைசித் தினத்தன்று தங்கப்பதக்கங்களும் வழங்கப்படும். இப்போட்டி ஆண், பெண் இரு பிரிவாக நடைபெறும்.

அடுத்த மாதம் 20 ந் திகதியன்று 14 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், 20 வயதுக்குட்பட்டவர்களாகவும்இருப்பவர்கள்மட்டுமே போட்டியில் பங்குபற்றலாம். இம்மாதம் 21-ந் திகதிக்கு முன்னர் போட்டியில் பங்கு பங்கு பற்றுவோர் விண்ணப்பிக்கவேண்டுமென சமாஜத்தினர் அறிவிக்கின்றனர்.

### சரவணையில்

ஊர்காவற்றுறை, புதன்.

சரவணை சைவ இளைஞர் மன்றத்தினர் அப்பர் சுவாமிகள் குருபூசைத் தினத்தைக் கொண்டாடினர். பகல் நடைபெற்ற திருமுறை ஓதல், புராண படனம், மகேசுர பூசை என்பவற்றைத் தொடர்ந்து மாலை நிகழ்ச்சியாக விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் இவ்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலவரங்களின் காரண மாக 20 பேர் கொல்லப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இறந்தவர்களின் தொகை 50 திலிருந்து 100 வரை இருக்கலாமென்று ஊர்ஜித மற்றசெய்திகள் கூறுகின்றன.

### கலவரத்துக்கு காரணம்

அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் மலே தென்றும் ஆளும் கட்சிப்பிர முகர்கள் சிலர் பிரதமர் துங்கு அப்துல் ரகுமானைக் கேட்டுக்கொண்டார்கள்.

இதைத் தொடர்ந்தே விரக்தியுற்ற சீனர்கள் மலேஸியர்களுடன் பகிரங்கமாக மோதிக்கொள்ளத் தொடங்கினார்கள் என்று கூறப்படுகின்றது.

பஸ்கள், கார்கள், வீடுகள் யாவும் தீயிடப்பட்டன.

இரத்ததானம் செய்யும்படி மலேஸிய வானொலி நேற்று முழுவதும் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தபடியிருந்தது.

பதற்றநிலைமை இன்னுமிருந்தபோதிலும் கலவரங்கள் கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாக அதிகாரிகள் கூறினார்கள்.

ளாக வசப்படுத்திவைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் சீன விவசாயிகள் சிலர் இப்பகுதியில் ஊடுருவ சோவியத் பகுதியில் வந்தார்களாம். இவர்கள் வன்செயல் எதுவுமின்றி வெளியேற்றப்பட்டனராம். இதைத் தொடர்ந்து ஆயுதம் தரித்த ஆயிரம் சீன சிப்பாய்கள் இப் பகுதியில் ஊடுருவல் செய்து கஸா லைப் பகுதிகளிலும் சீனத் துருப்புகள் ரோந்து நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாக பீகிங்வானொலி அறிவித்துள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் டமான்ஸ்கிதீவில் இருதடவைகள்சோவியத்—சீனத் துருப்புகள் மோதிக்கொண்டு பலர்பலியானதும் குறிப்பிடத்தக்கது.

சீனர்களின் புதிய ஊடுருவல்பற்றி சோவியத் அதிகாரியொருவரிடம் கேட்டபோது அவர் தமக்கெதுவும் தெரியாதென்று கூறிவிட்டார்.

தைச் சேர்ந்த டி. செல்வநாயகம்மீது மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந் வழக்கு நேற்று நீதிபதி திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

சகோதரர்களைப் போலப்பழகிப் பரஸ்பர ஆதரவையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தவேண்டியவர்கள் இப்படி விதண்டாவாதம் செய்து நாட்டைக்குழப்பத்திலாழ்த்துவது அழகல்ல, இவர்கள் உடனே இதற்குப் பரிகாரம் தேடவேண்டும்'

தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் இவ்வைபவம் நடைபெற்றது.

மேற்படி அறிக்கையொன்றை கொழும்பு ஐவர் வட்டத்தின் சார்பில் நெல்லை க. பேரன் விடுத்துள்ளார்.

(தென் வியட்னும்

# டானங் நகரில் 20 பேர் பலியாகினர்

## எட்டு ரொக்கட்டுகளை 'வியட்காங்' வீசினர்

சைகோன், மே. 14

வியட்காங்கியர் நேற்று தொடர்ந்து நடத்தியகுண்டு வீச்சில் எட்டு ரொக்கட்டுகள் டானங் நகரைக் கலக்கின. இந்த ரொக்கட்டுகளால் 20 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வேறு ஐந்து மாகாணத் தலைநகர்கள்மீதும் வியட்காங்கியர் தாக்குதல் நடத்தினர்கள்.

கடந்த சில தினங்களாகவே வியட்காங்கியரின்தாக்குதல்மும்முரமடைந்துவந்துள்ளதுசிலதினங்களுக்கு முன் சைகோன் நகர்மீது அவர்கள் பொதுமக்கள் வாழும் பகுதியில் ரொக்கட் வீசியதில் ஏழுபேர் கொல்லப்பட்டார்கள். நேற்று டானங் நகரில் வீசப்பட்ட ரொக்கட்டுகளுக்குப் பலியானவர்கள் அனைவரும் பொதுமக்கள் என்றுகூறப்படுகின்றது.

### நிக்ஸன் அழைப்பு

இதற்கிடையில் பாரிஸில் நடைபெறும்வியட்னும் அமைதிப் பேச்சுகளில் கலந்துகொள்ளும் அமெரிக்க கோஷ்டியின் தலைமைப் பிரதிநிதி திரு. கெபட்லாஜ் அதிபர் நிக்ஸனின் அழைப்பை ஏற்று வாஷிங்டன் போகிறுர். வியட்னும் பேச்சுக்களில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் பற்றி அவருக்கு திரு. நிக்ஸன் புதிய உத்தரவுகள் பிறப்பிக்கக்கூடும் என்று தெரிகின்றது

## எழுத்தறிவின்மையை ஒழிக்க சோவியத் பரிசு

மாஸ்கோ, மே. 14

பிரபல சோவியத் கல்வியாளரும், லெனினின் மனைவியுமான குருப்ஸ்கயாவின் பேரில் சோவியத் அரசாங்கம் சர்வதேச நடேஷ்டா குருப்ஸ்கயா பரிசை ஸ்தாபித்துள்ளது. எழுத்தறிவின்மையை ஒழித்துக் கட்டுவதில் ஆற்றப்படும் பெரும் பணிகளுக்கு இப்பரிசு (5000ரூபிள்கள்) வழங்கப்படும்.

இது சோவியத் அரசாங்கம் எடுத்துள்ள காலோசிதமான நடவடிக்கையாகும், எமது இந்த அண்டவெளிச் சகாப்தத்தில் எழுத்தறிவேயில்லாத 70 கோடி மக்கள் உலகில் உள்ளனர். சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் படிப்பறிவின்மை மிக உயர்வாக இருப்பதால் இது ஒரு அவசரமான சமூகப் பிரச்னையாக மாறியுள்ளது.

குருப்ஸ்கயா பரிசை ஸ்தாபிப்பதன் மூலம் உலகம் பூராவிலும், குறிப்பாக வளரும் நாடுகளில் கல்வி ஒளியைப் பரப்பும் மகோன்னதமான பணிக்கு சோவியத் யூனியன் பெரும் உத்வேகத்தை அளிக்கிறது என்று சோவியத் விமர்சகர் ஒருவர் தெரிவிக்கின்றுர்.

## கி.பாக்.மக்களுக்கு இந்தியா உதவி

புதுடில்லி, மே 14

கிழக்குப் பாகிஸ்தானில் அண்மையில்ஏற்பட்ட புயல் கஷ்டங்களுக்கானவர்களுக்கு இந்திய அரசு வழங்கிய உதவிகள் நேற்று அங்கு அனுப்பப்பட்டன.

54 துணிமூட்டைகளும், 67 மருந்து பொட்டலங்களும் கல்கத்தா வழியாக அனுப்பப்பட்டன.

## இரத்ததானம்

பருத்தித்துறை, புதன்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அறுபது மாணவரும் மாணவியரும் நேற்று முன்தினம் இரத்ததானம் வழங்கினர். இவர்கள் அனைவரும் உயர்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

## இசைபாடும் 'மோகினியை' கண்டுபிடித்தனர்

மாஸ்கோ, மே 14

சைபீரியக் கிராமங்களான மரிஞேவ்கா, தமோஷென்கா ஆகியவற்றிற்கு அண்மையிலுள்ள ஆழமான சொல்கோன் குகையில் நெடுங்காலமாக 'இசை பாடும் மோகினி' ஒருத்தி வாழ்ந்து வருவதாக ஒரு கர்ணபரம்பரைக் கதை நிலவிவந்தது. அந்தக் குகைக்குச் சமீபமாகச் சென்றவர்கள் கூட விநோதமான இசை அலைகள் அக்குகையினின்றும் வெளிவருவதைத் தாம் காதாரக் கேட்டதாகக் கூறினார்கள்.

இக்குகை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடும் நோக்கத்துடன் சைபீரிய குகை ஆராய்ச்சியாளர் குழு ஒன்று அண்மையில் சொல்கோன் குகையை நோக்கிப் பயணம் கட்டியது. சொல்கோன் பனிக் குகையை அடைந்த குகை ஆய்வியலாளர்கள் அங்கு 'மோகினி'யைக்காணவில்லை. விநோதமான இசை ஸ்வரங்களை வெளிவிடுவது யாரென்பதைக் கூர்ந்து கவனித்தனர். இறுதியில் அவர்கள் அந்த மர்மத்தைத் துலக்கியேவிட்டனர். கடலோரக்குகைகளில் இருக்கக்கூடிய பொங்கூசிப் பாறைகள்மீது காற்று வீசியடிக்கும்போதுதான் மனதுக்கு ரம்மியமான அந்த இசை ஸ்வரங்கள் எழுகின்றன என்பதை அவர்கள் அறிந்துகொண்டனர். காற்று வீச்சினல் ஊசிப் பாறைகள் வெளிவிடும் இந்த இசையொலிகள் குகைச் சுவர்களில் எதிரொலிக்கும்போது சரியாக மனிதர்களது குரலாகவே தொனிக்கின்றன!

இசை பாடும் ஊசிப்பாறைகள் நிறைந்த அந்தப் பனிக்குகை 90 மீட்டர் ஆழமானதாகும். அங்கு புராதன விலங்குகளின் எலும்புகள் இருக்கக் காணப்பட்டன.

## நாட்டியத்தில் ஒரு சாதனை

புதுடில்லி, மே 14

தொடர்ந்து 11 மணி 45 நிமிடங்கள் நாட்டியமாடி உலக சாதனையொன்றை நிலைநாட்டினர். பிரபல கதக் நாட்டிய மேதையான சிதாரா தேவி. இதனை சுமார் ஆயிரம்ரசிகர்கள் முன்னிலையில் அவர் நிகழ்த்திஞர்.

பத்து வருடங்களுக்கு முன் பிரபல நாட்டியக்காரரான கோபி கிருஷ்ண 9 மணித்தியாலம் தொடர்ந்து நாட்டியமாடி ஒரு சாதனையை ஏற்படுத்தியிருந்தார்.

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாயிற்று.

இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள புனித பிரான்சீஸ் சவேரியாரின் திருநாள் இம்மாதம் 20-ம் திகதி வெகுஆடம்பரமாய் கொண்டாடப்படும்.

......

## களவு

உடுப்பிட்டி, புதன்.

கரணவாய் வடக்கு சுட்டாங்கலட்டி ஞான வைரவர் கோவில் வெளிமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கற்பூரம் எரிக்கும் தட்டுகள், சூலங்கள் என்பன திருட்டுப் போய் விட்டன.

## பிரி. மந்திரி கல்தா

லண்டன், மே. 14

பிரிட்டிஷ்உள்நாட்டமைச்சர் கலஹான் பிரிட்டிஷ் மந்திரிசபையின் உட்குழுவிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் மந்திரிசபையின் கொள்கைகளை உருவாக்குவதில் இக்குழுவுக்கே அதிக பங்குண்டு பிரதமர் வில்சனின் தொழிற்சங்க சீர்திருத்த மசோதாவை திரு. கலஹான் பலமாக எதிர்த்து வந்துள்ளார். இவரை மந்திரிசபையிலிருந்து நீக்குவதற்காகவே திரு. வில்சன் குழுவிலிருந்து நீங்கியிருப்பதாகக் கருதப்படுகின்றது,

## ஒருவருக்கு அபராதம்

வலவெட்டித்துறை, செவ்

வலவெட்டியைச் சேர்ந்த துரைச்சாமி, செ.இராசு ஆகிய இருவரும் தெருவில நின்று சண்டை செய்து போக்குவரத்துக்கு இடைஞ்சல உண்டுபண்ணியதாக வலவெட்டித்துறைப் பொலிசாரால குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த பருத்தித்துறை மாஜிதிடிரேட் திரு. கே. விக்னராஜா, 1-ம் எதிரி தான் சுற்றவாளி எனக் கூறவே, அவர் விசாரணையை இம்மாதம் 28-ம் திகதிக்கு ஒத்திவைத்து 2-ம் எதிரிக்கு 25 ரூபா அபராதம் விதித்தார்.

## வலைகள் திருட்டு

புலோலி, செவ்.

குடத்தனை கரையூர் பகுதியில் நேற்று முன்தினம் மீன்பிடிபடகிலுள்ள 600 ரூபா பெறுமதியான வலைகளை இனம் தெரியாத நபர்களால் களவாடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது இவ்வலைத் திருட்டில் ஈடுபட்டுள்ளவர்கள் வேறு ஊர்களில் இருந்து வந்து திருட்டை நடாத்துவதாக கூறப்படுகிறது. பருத்தித்துறைபொலிசார் இவ்வலைத் திருட்டு சம்பந்தமாக புலன் விசாரணை நடாத்துகிறுர்கள்.


'ஈழநாடு'

# 10வது ஆண்டு நிறைவுவிழா விளையாட்டுப்போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி கீழ்க் குறிப்பிடப்படும் விளையாட்டுக்கள் ஜூன் 3-ம் திகதி தொடக்கம் நடாத்தப்பட்டு இறுதிப் போட்டிகள் ஜூன் மாதம் 12, 13, 14-ம் திகதிகளில் நடாத்தப்படும்.

## விளையாட்டுக்கள்:

1 மரதன் ஓட்டம்-26 மைல்-யாழ்ப்பாண மாவட்டம்
2 கைப்பந்தாட்டப் போட்டி-இன்ரர் கிளப்
3. கூடைப் பந்தாட்டப் போட்டி-பாடசாலைகளுக்கு
4. கால்பந்தாட்டம்-யாழ்ப்பாண மாவட்டம்
5. வலைப்பந்தாட்டம்-பாடசாலைகளுக்கு
6. தாச்சி

மேற்படி விளையாட்டுகளில் வெற்றி பெறுவோருக்கு பலவித கவர்ச்சிகரமானபரிசில்கள்வழங்கப்படும். இப்போட்டி சம்பந்தமான விபரங்களும், நிபந்தனைகளும் 'ஈழநாடு' பத்திரிகையில் அடிக்கடி பிரசுரிக்கப்படும்.

ஒரு போட்டிக்கு ஒரு கூப்பன் வீதம் அனுப்பப்படல் வேண்டும்.

## விளையாட்டுப் போட்டி கூப்பன்

1, ஜூன்மாதம் 1-ம் திகதிக்கு முன் ஆறுமாதங்களுக்குத் தொடர்ந்து யாழ்மாவட்டத்தில் நிரந்தர வாசியாக இருந்தேன்.
2. நான்பங்குபற்றும் விளையாட்டின் விபரம்...
..........................................................
..........................................................
3. இப்போட்டியின்போது தகராறுகள் ஏற்படின் மத்தியஸ்தர்களின் தீர்ப்பை ஏற்கத் தயாராக உள்ளேன்.
4. இப்போட்டியில் எனதுவிருப்பத்தின் பேரிலேயே பங்குபற்றும் நான் போட்டியின்போது காயங்கள் ஏற்படின் அதற்குநஷ்டஈடு கோரமாட்டேன்'
5. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு நான் தெரிவித்த விபரங்கள் உண்மையானதும் சரியானதுமென உறுதிப்படுத்துகிறேன்.

..............................
கையொப்பம்

விலாசம்
..............................
..............................
..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நேர்வழியில் நடப்பவர்கள் இன்னலைத் தவிர்க்க எவ்வளவுதா யன்ருலும் இன்னலைத் தவிர்க்க முடியாது.

மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் வைகாசி மாதம் 2-ந் திகதி (15-5 69)


## ஒரு புதிய ஆபத்து!

இலங்கையிலே வாழும் இரு முக்கிய சமூகத்தவரான சிங்களவர், தமிழர் இவர்களிடையிலே மொழி, அரசியல் முதலிய சில பிரச்னைகள் ஏற்பட்டிருப்பினும், சமய சம்பந்தமாக இதுவரை இரு சார்பினரிடையிலும் மிக நல்லுறவு இருந்துவருகின்றது. சிங்களவரில் பெரும்பாலோர் பௌத்தர்கள். தமிழரில் பெரும்பாலோர் இந்துக்கள். என்ருலும் இவ்விரு சமயத்தவரிடையிலும் பரஸ்பர நல்லுறவு இங்கு நீடித்துவருகின்றது. பௌத்தர்கள் கதிர்காமம் உள்ளிட்டு இந்துக்கோயில்களில் பக்தியுடன் வழிபடுவதையும், இந்துக்கள் புத்தர்பிரானை ஓர் அவதாரமாக மதித்து வழிபடுவதையும் சர்வ சகஜமாகப் பார்க்கின்ருேம். மொழியால் வேறுபட்டிருப்பினும், சமயத்தால் இவ்விரு பெரிய சமூகத்தவருக்குமிடையிலேஒத்துழைப்பு தொன்றுதொட்டு இருந்துவருவது மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்கது. முருகனும் மகாவிஷ்ணுவும் இந்த ஒற்றுமைச் சக்திகளாகப் பொலிந்துவருகின்றனர். இவ்வித தெய்வீக ஒற்றுமைக்கு உலைவைக்கும்முகமாகப் புதிய பிரச்னைகள் கிளப்பப்படுவது பெரிதும் வருந்தத்தக்கது. இது நீடிக்குமாயின் நாட்டின் அமைதிக்கும், முன்னேற்றத்துக்கும் பெரிய ஆபத்தாக முடியுமாதலால் நாட்டின் நன்மையில் அக்கறையுள்ள எல்லாரும் இதில் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

திருக்கோணமலை கோவில் பற்றியும், அச்சுவேலி, கரவெட்டி, அல்வாய் இம்மூன்று கிராமங்களிலும் ஏற்படுத்தப்பட்ட மூன்று பௌத்த பள்ளிக்கூடங்கள் விஷயமாகவுமே புதிய பிரச்னைகள் தோன்றி இரு சமயத்தவருக்குமிடையே நல்லுறவைக் கெடுக்கச் செய்வதாகவுள்ளன. புராண காலத்திலே களிருக்க, அங்கு இந்துக் கோவில் புதிதாகத்தான் கட்டப்பட்டதாகச் சிலர் அரசியல் நோக்குடன் கூறுவதையும், 'டெயிலிநியூஸ்' உள்ளிட்டு கொழும்புப் பத்திரிகைகள் அச்செய்தியைப் பிரமாதப்படுத்தி, இந்து—பௌத்த வேற்றுமைகளைக் கிளப்பிவிடும் முறையில் செய்திகள் பிரசுரிப்பதையும் பார்க்கிருேம். இந்தத் தீயை வளரவிடுவது யாருக்கும் நல்லதல்ல. இதில் பிரதமரின் பொறுப்பு அதிகமாகும்.

இதேசமயம், அச்சுவேலி உள்ளிட்டு மூன்று கிராமங்களில் இந்து சமூகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களில் பலர், தங்களுக்குள்ள சமூக அநீதிகளைச் சகிக்கமுடியாமல் பௌத்தர்களாக மதம் மாறி இருப்பின் அதற்கான பொறுப்பு இந்து சமூகத்தவரையே சாரும். அவர்களுக்கு சமூகத்தில் சமநீதி வழங்கப்படுவதாயின், இப்பொழுதும் கூட அவர்கள் மனம் மாறவும், மீண்டும் தங்கள் பழைய மதத்துக்கு திரும்பவும் கூடும். பொதுவாக இந்து சமூகத்தில் இதற்கான முறையில் உணர்ச்சி அதிகரித்துவருவதைப் பார்க்கின்ருேம். முக்கியமாகத் தீண்டாமைக் கொடுமையால் மக்கள் மதம் மாறி இந்து சமூகத்துக்குப் பெரிய பல வீனமும், நாட்டுக்கு ஆபத்தும் எப்படி ஏற்பட்டுள்ளதென்பதை அண்மையிலுள்ள நாடு நமக்கு எச்சரிக்கை செய்கின்றது.

ஆகவே இந்தப் பிரச்னைகளை மனிதாபிமானத்துடனே கருணையுடன் தீர்க்க தலைவர்கள் முற்பட வேண்டுமேயன்றி அரசியல் பிரச்னையாக்கி நிலைமையை மோசமாக்க இடமளிப்பது கூடாது. நாட்டின் ஒற்றுமையிலும் அமைதியிலும், முன்னேற்றத்திலும் கவலை கொண்டிருந்த பிரதமர் இவ் விஷயத்தில் உடன் தலையிட்டு இப்பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க எல்லா முயற்சிகளை

பௌத்தபாடசாலைகள் விவகாரம்

# கல்வி அமைச்சர் ஏற்பாட்டுக்கு பௌத்த பிரமுகர்கள் ஆதரவு

## தமிழரசு நடவடிக்கை பற்றியும் கவலை

கோட்டை, புதன்

யாழ். மாவட்டத்திலுள்ள அச்சுவேலி, கரவெட்டி அல்வாய் ஆகிய இடங்களிலுள்ள 3 பௌத்த பாடசாலைகளை அடுத்த 1-ம் திகதி அரசாங்கம் பொறுப்பேற்கும் என்ற கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலையின் தீர்மானத்துக்கு பௌத்த பிரமுகர்கள் பலர் ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

கல்வியமைச்சர் ஏப்பிரல் 2-ம் திகதி தன்னைச் சந்தித்த அகில இலங்கை தமிழ் பௌத்த காங்கிரசின் தூதுக்குழுவிடம் அரசாங்கம் பிரஸ்தாப பாடசாலைகள் மூன்றையும் கையேற்கும் எனத் தெரிவித்துள்ளார். அமைச்சரை சந்தித்த இத்தூதுக்குழு சிறிவிபாசி வித்தியாலய, நாரத வித்தியாலய, ஆனந்த சேமகே வித்தியாலய ஆகிய இந்த 3 பாடசாலைகளிலும் 950 மாணவர்களும் அவர்களுக்கு கல்வி போதிக்க 28 ஆசிரியர்களும் உள்ளனர் எனத் தெரிவித்து பூநகரியிலுள்ள மதிஹி பன்னஸீக வித்தியாலய கோப்பாயிலுள்ள ஸ்ரீ நந்தராம வித்தியாலய ஆகிய இரு பாடசாலைகளையும் பின்னர் அரசாங்கம் பொறுப்பேற்கும் என இத்தூதுக்குழுவிடம் அமைச்சர் தெரிவித்தார்.

4 வருடங்களுக்கு முன்னர்ஸ்தாபிக்கப்பட்டவிபாசி வித்தியாலயா அப்பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களின் வேண்டுகோளுக்கிணங்க திரு. நிசங்க விஜயவர்த்தன, திரு. பீற்றர் டி சொய்சா ஆகிய இருவராலும் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுதுள்ள் கல்வியமைச்சின் உதவியமைச்சர் இ பாடசாலைகளை நிறுவ இவர்களுக்கு உதவியளித்தார். திரு. ஆனந்த சேமகே சேமகே கைத்தொழில்ஸ்தாபன உதவியோடு அல்வாயில் ஆனந்த சேமகே வித்தியாலயத்தை நிறுவினர்.

பலதடவை கரவெட்டிக்கு விஜயம் செய்த வண நாரத தேரோ அப்பகுதியில் உள்ள பௌத்த பாடசாலையை நிறுவ உதவி செய்தார். கரவெட்டியிலுள்ள தாழ்த்

தமான ஆதாரங்களோடு நிருபிக்கலாம். பழைய தமிழர்கள் இவர்களை அடிமைகளாக வைத்திருந்ததன் காரணத்தினலே இம்மக்கள் தங்கள் நிலையையும் அதிகாரங்களையும் சமூகத்தில் இழந்தனர்.

'கோவியர்' என்ற தமிழ் சொல்லின் கருத்து விவசாயி என்பதாகும். இந்த தாழ்த்தப்பட்டவர்களை இன்றும் வடக்கில் தமிழ் பெயர்களோடு காணக்கூடியதாகவிருக்கிறது. யாழ்ப்பாணத்தின் பழைய வரைப்படங்கள் பௌத்த விகாரைகளும், டகோபாக்களும் பௌத்த நிலயங்களும் நிறைந்து காணப்படுகிறது. பௌத்தர்களின் இந்த புனித ஸ்தாபனங்கள் பின்னர் அழிக்கப்பட்டன

சிங்கள பௌத்தர்கள் தமிழர்களை சிங்களவர்களாக்க ஒருபொழுதும் விரும்பவில்லை. ஆனல் மேற்படி பாடசாலைகளை நிறுவி பௌத்தர்கள் அளித்த சலுகை யாழ்ப்பாணத்தில் அவமதிக்கப்பட்டு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று அதைக் கடமை என நினைத்து நிறைவேற்றியதைக் காட்டுகிறது.

இந்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை எதிர்ப்பது மனித அடிப்படை உரிமைக்குப் பங்கம் விளைவிப்பதாகும் தமிழரசுக்கட்சி இதற்கெதிர்ப்புத் தெரிவித்து நேரடி நடவடிக்கைகளில் இறங்குவதெனத் தீர்மானித்திருப்பது நாட்டின் அமைதி நிலையைப் பாதிப்பதாக அமையும்.

'தமிழரசுக்கட்சி இப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது புதிய விடயமல்ல. வண. அமுனுகம சிறி விபாஸி மகா நாயக்க ... வி... ... இத்தகைய எதிர்ப்புக்

காங்கிரஸ் தலைவர் திரு. பீற்றர் டி. சொய்சா தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப பாடசாலை அரசாங்கம் பொறுப்பேற்பது குறித்து தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பாடசாலைகள் இயக்கத் தலைவி திருமதி ரத்ன குணதிலகா தனது கருத்தைத் தெரிவிக்கையில், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவே முயற்சிக்கிருர்கள். இந்த விடுதலைக்கு அவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதியளிப்பதே சிறந்ததாகும். இந்துப் பாடசாலைகள் இவர்களைப் புறக்கணித்துள்ளன எனத் தெரிவித்தார். இப்பாடசாலை இயக்கத்தை ஆரம்பகாலத்திலிருந்து ஆதரித்து வந்த திருமதி விமலா தேவி சொக்கநாதன் தமிழரசுக் கட்சி இப்பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கும் போது மேற்கொள்ள விருப்பதாகக் கூறியுள்ள நடவடிக்கைகள் அநீதியானது மட்டுமின்றி சரியானதுமல்ல. இந்தப் பிரச்னை அரசியல் பிரச்னையல்ல. இது ஒரு தேசியப் பிரச்னை.

# 'நவீனமுறையில் சலவை தொழிலாளர்க்கு வசதி'

## யாழ் மேயர் தகவல்

யாழ்ப்பாணம், வெள்ளி

'கொழும்பு மாநகரசபையில் நடப்பதுபோல், யாழ்ப்பாணத்தில் சலவைத் தொழில் செய்ய பிரத்தியேக இடத்தை எடுத்து சுகாதாரத்திற்கு பாதகமல்லாதபடி, பல தொட்டிகள் கட்டி மின்சார உதவியுடன் தண்ணீர் தருவித்து நவீன முறையில் சலவைசெய்ய வசதியான முறைகளைப் பற்றி ஆலோசனைசெய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். நாகராசா நேற்று தம்மைப் பேட்டிகண்ட யாழ்ப்பாணம் சலவைத் தொழிலாளர்சங்க தூது கோஷ்டியிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கப்பிரதிநிதி திரு. எஸ். சுப்பிரமணியம் தலைமையில் சலவைத் தொழிலாளர் சங்க தூதுகோஷ்டி மேயரைப்பேட்டி கண்டது இச்சந்திப்பின்போது, உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம், மாநகரசபை உறுப்பினர் திரு. கே வி. தெய்வேந்திரன் ஆகியோர் இக் ஜினியர் திரு. ஏ. வைத்திலிங்கம் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் நவீன முறையில் சலவைத் தொழிலை அபிவிருத்திசெய்வதற்கு அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் பணம் ஒதுக்கப்படுமெனவும், மேயர் தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டருக்கு முன் உள்ள குளத்திற்கு ஒரு பாதையில்லாததால் மழை காலங்களில் சலவை செய்யமுடியாமல் தொழிலாளர் கஷ்டப்படுவதை, சுட்டிக்காட்டி, மாநகரசபை உடனடியாக பாதை ஒன்று போட்டுத்தருமாறு தூது கோஷ்டி கேட்டுக்கொண்டது.

உடனடியாக பாதை ஏற்படுத்த மாநகரசபை இஞ்ஜினியர் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இவ்வேலை கூடிய கெதியில் முடிக்கப்படுமென்றும் மேயர் தெரிவித்தார்.

'...யில் ...'

# ஐயாறன் எழுதுவது

வி. கே. கிருஷ்ணமேனன் இந்திய லோகசபை தேர்தலில் வெற்றிபெற்றது, பிரதமர் இந்திராவுக்குப் புதிய தலையிடியாகும்.

நேருஜிக்கு வலக்கரமாக பல வருடங்கள் இருந்து வந்த மேனன் லண்டனில் இந்திய ஹைகமிஷனராகவும், இந்தியாவின் பாதுகாப்பு மந்திரியாகவும் பல்லாண்டுகள் இருந்து தொண்டாற்றினர். ஐக்கிய நாடுகள் சபையிலே இந்தியாவின் சார்பாக காஷ்மீர் பிரச்னையில் அவர் நாள்கணக்காகப் பேச்சுப் போரில் ஈடுபட்டிருந்தது சரித்திரத்தில் பதியத்தக்கது.

ஆனல் இந்திய—சீன எல்லைப் போராட்டத்தின் போது அவர் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச்செய்யவில்லையென்று குற்றம்சாட்டப்பட்டு பதவிஇழந்தார். பின்னர் நடந்த தேர்தலில் காங்கிரஸ் அவரை அபேட்சகராக நியமிக்கவில்லை பம்பாய் தொகுதியில் அவருக்கும், காங்கிரஸ் அபேட்சகருக்கும் பலத்த போட்டி. அவரை எதிர்க்க "சிவசேனை" ஏவிவிடப்பட்டது. அமெரிக்கா அவருக்கு எதிராக அதிக பணம் செலவழித்ததாகவும், அவர் சார்பில் ரஷ்யா அதிகம் உதவியதாகவும் பலத்த வதந்திகளுண்டு. பல முறை அவர் சுயேச்சையாக தேர்தலுக்கு நின்றும் வெற்றி பெறமுடியவில்லை.

கடைசியாக வங்காளத்திலே மிதுனபுரி தொகுதியில் கூட்டணிக் கட்சியின் சார்பில் போட்டியிட்டதில், ஒரு லட்சம் அதிகப்படி வாக்குகளால் காங்கிரஸ் அபேட்சகரைத் தோற்கடித்தார். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். அவரது வெற்றியால் லோகசபையில் எதிர்க்கட்சிகளின் செல்வாக்கும் பலமும் அதிகரிக்கும். இனி லோகசபை விவாதங்கள் அதிக ருசியாக இருக்குமென்று எதிர்பார்க்கலாம்.

0 0

அரசியல் விளையாட்டே விசித்திரமானது. முன்னர் சுந்தரலிங்கத்தார் அரசாங்க சபைத் தேர்தலில் பன்முறை போட்டியிட்டு தோற்ருர். என்ருலும் முயற்சியைக் கைவிடாமல், கடைசியாக வெற்றியும் பெற்று மந்திரியானுர். பின்னர் அப் பதவியையும் விட்டார். தேர்தலில் தோல்வியுற்ருலும் அவர் தியல் எதிரிகளும் ஒப்புக்கொள்வர். மாவை ஆலயப்பிரவேச வழக்குத் தீர்ப்பை (ரூபா 50 அபராதத்தை) ஆட்சேபித்து, இனி அவர் பிரிவுகவுன்ஸிலுக்கு அப்பீல் செய்வாரா என்பது தெரியவில்லை. தமது கோயிலை எல்லாருக்கும் திறந்துவிட்ட சுந்தரர் மாவைக் கோயிலில் மாருக உள்ளது பலருக்கும் புரியாத புதிராகும். வயது ஆனுலும் அவர் இன்னும் வாலிபஉற்சாகத்துடனேயே இருக்கிருர். அவர் எங்கிருந்தாலும் அந்த இடத்தில் "கலகலப்பு" இருக்கும். அவர் தனிப்போக்கில் செல்லாது மற்ற தலைவர்களுடன் சேர்ந்து ஒத்துழைத்தால் தமிழ்சமூகத்துக்கும் நாட்டுக்கும் எவ்வளவு உதவியாக இருக்கும்!

0 0 0

தமிழ்வாணனும், பகீரதனும் தென்னிலங்கைக்கு வந்து பேசவேண்டாததையெல்லாம் பேசிவிட்டு ஒரு விதமாக இந்தியாவுக்கு பறந்துசென்றுவிட்டனர்.

இங்கு ஒரு சங்கீதக் கச்சேரிக்காக வந்தவர்கள், வந்தசோலியைப் பார்த்துவிட்டுப்போனல் வம்பில்லை. இங்குள்ள அரசியல் பிரச்னைகளை எப்படித் தீர்ப்பது என்று அவரை யாரும் யோசனை கேட்டார்களா? கேட்டாலும் தமக்குஇந்தநாட்டு அரசியல் தெரியாதென்று ராஜதந்திர மௌனம் சாதித்திருந்தால் விவேகமாகஇருக்கும்.

"துணிவே துணை......" என்றுள்ள என்னை எந்தச் சக்தியாலும் எதுவும் செய்துவிட முடியாது" என்று பிரியா விடையின் போது அவர் கூறியதிலிருந்து, அவருக்கு இங்கு அதிக எதிர்ப்பும் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது. வரவேற்பும் 'சினிமா ஸ்டார்' போல அவருக்குஅதிகமிருந்ததாம்.

இந்த ஈழத்து முதல் விஜயம் அவருக்கு பெரும் விளம்பரம் அளித்துள்ளது. "கல்கண்டு" என்ருல், "அறிந்துகொள் பார்த்து" என்று அவர் கூறுவாராம். ஈழத்தைப்பற்றி அவர் சில நாட்களில், பலவற்றை "கல் கண்டு" செய்திருப்பார்

0 0 0

மிக்காலைக் குறைந்தடைந்தார் மேலவரலை வெல்லவ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வுமே புதிய பிரச்னைகள் தோன்றி இரு சமயத்தவருக்குமிடையே நல்லுறவைக் கெடுக்கச் செய்வதாகவுள்ளன. புராண காலத்திலே இராவணன் முதல் பலரும் வழிபட்டுவந்துள்ள இந்தப் புனித பாடல்பெற்ற ஸ்தலத்திலிருந்த கோணேசர் கோவிலை போர்த்துக்கீயர் இடித்ததாகசரித்திரச்சான்று

அமைதியிலும், முன்சென்றுநந்திலும் கவலை கொண்டிருந்த பிரதமர் இவ் விஷயத்தில் உடன் தலையிட்டு இப்பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். மனிதாபிமான அடிப்படையில்சம்பந்தப்பட்ட தலைவர்கள் ஒத்துழைப்பின் இதற்கு நல்ல முடிவுகாண்பது கடினமல்ல.

## அமைச்சர் கைவிரிப்பு

இதோ இன்னும் கொஞ்ச நாளில் வந்துவிடும்; உங்கள் கஷ்டங்களை அறிந்து கொண்டோம். எப்படியும் 'கோபோல்ட்' புற்றுநோய்த் தடுப்புசிகிச்சைக் கருவி விரைவில் இங்கு அனுப்பி வைக்கப்படும் என்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோதெல்லாம்இங்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்களில் அமைச்சர்கள் வாக்குறுதியளித்துச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருந்த புற்றுநோய் தடுப்புச் சிகிச்சைக் கருவி கண்டி ஆஸ்பத்திரியில் பொருத்தப்படவிருக்கிறதாம். இதன் பின்னர் மூன்ருவது புற்றுநோய் சிகிச்சைக் கருவி அமைப்பதில் யாழ்ப்பாணம் பற்றிக் கவனம் செலுத்தப்படுமென்று அதுவும் நிதிவசதியைப் பொறுத்திருக்குமென்றும் சுகாதார அமைச்சு அறிவித்திருக்கிறது.

புற்றுநோயால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களின் தொகை யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகிறது. இந்நோய்க்குச் சிகிச்சைபெற மகாரகமை சென்று பலவித இன்னல்களையும் அனுபவிப்பதைவிட இங்கேயே கிடந்து மடிந்துவிடலாமென பலரும் நினைக்கின்றனர். இங்கு புற்றுநோய் சிகிச்சைக் கருவியைக் கொண்டு வருவதற்குப்பலவருடங்களாக பலர் முயற்சி செய்து அதற்குச் செவிசாய்ப்பது போல் நடந்து ஆசை வார்த்தை காட்டிய அமைச்சர்கள் கடைசியில் கையை விரித்து விட்டார்கள்.

யாழ்ப்பாணத்துக்குவரவிருந்த புற்றுநோய் சிகிச்சை கோபோல்ட் கருவிகண்டிக்குப் போய்ச் சேருகிறது. சுகாதார அமைச்சர் ஆட்சிமன்றத்தில் கண்டித் தொகுதிக்கு பிரதிநிதித்துவம் வகிப்பதன் அதிர்ஷ்டமா இது?

வவுனியா ஆஸ்பத்திரிக்கென ஒதுக்கப்பட்டிருந்த புதிய எக்ஸ்ரே இயந்திரம் கொழும்பிலேயே நின்றுவிட்டது.

ஒருகண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணும்பும் தடவிக்கொண்டு ஒற்றுமை தேசிய ஐக்கியம் என்று பேசிக் கொண்டிருப்பதால் என்ன பயன்? யாருக்கு இலாபம்?

## முக்கிய மற்றதிட்டங்களை பின்போடவேண்டும்'

கோட்டை, புதன் அதி முக்கியமானதெனக் கொள்ளப்படாத திட்டங்களை அரசாங்கம் பின்போடவேண்டும் என அரசாங்கத்தின் அந்நிய செலாவணி வரவு செலவுத் திட்ட குழு கேட்டுக் கொள்கிறது.

இப்பொழுதுள்ள அந்நிய வருவாய் இத் திட்டங்களில் முதல் திட்டமிட்டவைகளுக்கு வழங்குதல் என்ற அடிப்படையிலே வழங்கப்படும். ஆதலால் அரசாங்கம் சகல அமைச்சுகளுக்கும் அவைக் குரிய திட்டங்களை ஆராய்ந்து நீண்ட காலத் திட்டங்களை பின்போடுமாறு உத்தரவிட வேண்டுமெனப் பிரஸ்தாப குழு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டால் நாட்டின் சேமிப்பு ஒரே தடவையில் செலவாகாது பாதுகாக்கப் படலாம் என இக் குழு மேலும் தரிவித்துள்ளது.

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு மே மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விஜயம் செய்த வண. நாரத தேரோ அப்பகுதியில் உள்ள பௌத்த பாடசாலையை நிறுவ உதவி செய்தார். கரவெட்டியிலுள்ள தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு இழைக்கப்பட்ட அநீதிகாரணமாகவே அவர்களின் விருப்பத்துடனேயே இந்த பாடசாலை நிறுவப்பட்டது. என வண. நாரத திங்களன்று தெரிவித்துள்ளார். கோப்பாயிலுள்ள பாடசாலை வடமாகாணத்தில் வசிக்கும் சிங்கள மக்கள், அரசாங்க ஊழியர்கள் ஆகியோரது உதவியோடு ஸ்தாபிக்கப்பட்டது.

இப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல் சம்பந்தமாக வண. மதிஹி பன்னஸீஹ மகாநாயக்க தேரோ குறிப்பிட்டதாவது: 'மேற்கூறப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களில் பெரும்பான்மையினேர் சிங்கள பௌத்தர் களேயன்றி வேருெருவருமல்ல. இந்த உண்மையை சரித்திர சம்பந்

விடயமல்ல. வண. அமுனுகம சிறி விபாஸி மகாநாயக்க தேரோ வடக்குக்கு விஜயம் செய்திருந்தபொழுதும் இத்தகைய எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது' என இப்பாடசாலைகளை ஸ்தாபிக்க உதவிய திரு. பீற்றர் டி. சொய்சா இவ்விஷயம் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசரங்கம் தமிழருக்கு பதுளை மாவட்டத்தில் 5 பாடசாலைகளை நிறுவியுள்ளது. முஸ்லிம்களுக்கு பாடசாலைகள் பயிற்சிக்கல்லூரிகள் தமிழர்களுக்கு பாடசாலைகள், பயிற்சிக்கல்லூரிகள் ஆகியவற்றை அரசாங்கம் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு எங்கும் நிறுவியுள்ளது. இதற்கு ஒருவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. தடை விதிக்கவுமில்லை. ஒரு சில அரசியல்வாதிகளின் விருப்பத்தை அரசாங்கம் கவனிக்குமாஞல் வடக்கிலே அது ஒரு குழப்பத்தையே உருவாககி விடுவதாகும்என அகில இலங்கை பௌத்த

### ஆசிரியருக்குகடிதம்

## எழுத்தாளர் சங்க தலைவர் விளக்க

13-5-69 ஈழநாடு பத்திரிகையில் முதலாம் பக்கத்தில் 'மட்டக்களப்பில் புகீரதன் என்ற செய்தியில் அன்புமணி மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் வரவேற்புரை கூறிஞர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது இது சரியல்ல.

பகீரதனையோ அன்றி தமிழ்நாட்டு எழுத்தாளர்களையோ இனிமேல் மட்டக்களப்பில் வரவேற்பளித்துக் கௌரவிப்பதில்லையென எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு இம்மாதம் 8-ம் திகதி மாலை கூடிய கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்தது, ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் எவ்வித இடமும் அளிக்காததால் தொடர்ந்து உதாசீனம் செய்துவரும் போக்கை கண்டிக்கும் முகமாகவே எழுத்தாளர் சங்கம் இந்த முடிவை மேற்கொண்டது.

10-ம் திகதி மட்டக்களப்பிலே நடைபெற்ற வரவேற்பு மட்டக்களப்பு தமிழ் கலாமன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் திரு.அன்புமணி தனிப்பட்ட முறையிலேயே கலந்து கொண்டாரே தவிர எழுத்தாளர் சங்சத்தின் சார்பிலல்ல என்பதை தெரியப்படுத்த விரும்புகிறேன்.

ரீ. பாய்க்கியநாயகம்
தலைவர்
மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம்.

மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம், மாநகரசபை உறுப்பினர் திரு. கே வி. தெய்வேந்திரன் ஆகியோர் இக் கூடிய கெதியில் முடிக்கப்படுமென்றும் மேயர் தெரிவித்தார்.

## 'திருமலையில் டின்மீன் தொழிற்சாலை நிறுவுக'

திருகோணமலை, புதன்

திருமலையைச் சேர்ந்த வழக்கறிஞரும் தம்பலகமம் பல நோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவருமான திரு. எம். கே. செல்வராஜா இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் தலைவர் திரு. எட்மன் விஜயசூரியாவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில், திருகோணமலையில் மீன்களை டின்களில் அடைக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவும்படி வற்புறுத்தியுள்ளார். தற்போது இலங்கையில் தங்கி நிற்கும் பிரான்ஸ்தேசத்தைச் சேர்ந்த மீன்பிடித் தொழிளர் நிபுணத்துவம் பெற்றுள்ளவர்களுடன் தலைவரைத் திருகோணமலைக்கு விஜயம் செய்து இதன் சார்பாக இங்குள்ள இடத்தைப் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மீன்பிடித் தொழிலில் மிகவும் ஈடுபாடுள்ள திருகோணமலையில் அவற்றைச் சேகரித்து வைக்கும் களஞ்சிய அறைகள் நிரம்ப இருப்பதால் இங்கு பிரஸ்தாப தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதினுல் டின்மீன்களை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதனுல் வெளிநாட்டுச் செலாவணியை மேலும் மேலும், அதிகரிக்க அரசாங்கத்துக்கு பெரும் வாய்ப்புண்டு என்று அவர் மேலும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

## கி. ச. தேர்தல்

ஊர்காவற்றுறை. புதன்

நாரந்தனைக் கிராம சபைத்தேர்தல் இம்மாதம் 26-ம் திகதி நடைபெறும் எனத் தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

# 'ஈழத்து தமிழ்படங்களையும் தமிழகத்தில் திரையிடுங்கள்'

யாழப்பாணம், வியாழன்

''தமிழகத்தில் சிங்களத் திரைப்படங்களைத் திரையிடத் தாங்கள் முடிவுசெய்திருப்பது வரவேற்கப்படத்தக்க செயல் எனினும், தனியே தனிச்சிங்களப்படங்களைத் திரையிடாது ஈழத்தில் வெளிவந்த தமிழ்ப்படங்களில் இரண்டையாகுதல் தமிழ்நாட்டில் திரையிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேம்'' என்று இந்திய சினிமாப்பட ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஏ. எல். ஸ்ரீநிவாசனுக்கு யாழ், இலக்கியவட்ட இணைச் செயலாளர் திரு. யாழ்வாணன் எழுதியுள்ள கடிதமொன்றில கேட்டுக் கொண்டுள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.-

இலங்கை சிங்கள மக்களை மட்டுமே கொண்ட ஒரு நாடல்ல. இங்கு தமிழரும் வாழ்கிருர்கள் என்ற உண்மையைத் தங்களுக்குத்தெரியப்படுத்தவிரும்புகிறேம்.

தமிழகத்தில் இருந்து இங்கு இறக்குமதியாகும் தமிழ்ப்படங்களை சிங்கள மக்கள்மட்டும்கண்டு களிக்கவில்லை. தமிழ்மக்களும் அவற்றைப் பார்க்கிருர்கள் என்பதைத் தாங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இங்குள்ள தியேட்டர்களில், சிங்களப் படங்களைப் போதியளவு திரையிடாது தொடர்ந்து தென்இந்திய தமிழ்ப் படங்களைத் திரையிட்டுவந்த காரணத்தால் சிங்களமக்களும் திரைப்பட நடிகர்களும், செய்த கிளர்ச்சியின் பயனுகவே அரசாங்கம் மூன்று பிரதிகளுக்கு மேல் திரைப்படப் படங்களை இங்கு இறக்குமதி செய்யக்கூடாது எனத் தடைவிதித்தது. இத்தடையின்பிரதிபலிப்பாகவே சிங்களத்திரைப்பட விழா வொன்றினைத் தாங்கள் ஒழுங்குசெய்யமுன் வந்துள்ளீர்கள்.

இலங்கையில் சிங்களப் படங்கள் மாத்திரமல்ல, தமிழ்ப் படங்களும் தயாரிக்கப்படுகின்றன என்ற உண்மையைத் தாங்கள் மறந்து போகக் காரணம் யாதோ?

தமிழக திரைப்பட வளர்ச்சியுடன் ஈழத்துத் தமிழ் [சினிமா வளர்ச்சியை ஒப்பிடக் கூடாது தமிழகத்தில் திரைப்படத் தொழில் ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டுகள் கடந்து விட்டன. சிங்களத் திரைப் படங்களின் உற்பத்தியும் கடந்த 12 வருடங்களாக வளர்ச்சியடைந்து வருகிறது. ஈழத்தில் கடந்த4 வருட காலமாகத்தான் திரைப் படங்க தமிழில் தயாரிக்க ஆரம்பித்துள்ளோம்.

ஆகவே, தமிழக திரைப் படத் துறையின் வளர்ச்சியோடு, ஈழத்துத் தமிழ்த் திரைப் படங்களின் தரத்தை, தொழில் நுணுக்கத் திறமையை ஒப்பிடாது, ஈழத்தில் தயாரிக்கப்பட்ட படங்கள் என்ற ரீதியில், சிங்களத் திரைப் படங்களோடு, தமிழ்த் திரைப் படங்களையும் இலங்கைத் திரைப் படவிழாவின் போது திரையிட ஒழுங்கு செய்யுங்கள்.

தங்களால் ஒழுங்கு செய்யப்படும் திரைப்பட விழா, சிங்கள திரைப்பட நடிகர்களைத் திருப்திப்படுத்தும் சிங்களத் திரைப்பட விழாவாக அமையாமல், இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் கவரக்கூடிய இலங்கைத் திரைப் பட விழாவாக அமையவேண்டுமென நாம் அவாவுறுகிறேம்.

ற்சியைக் கைவிடாமல், கடைசியாக வெற்றியும் பெற்று மந்திரியானுர். பின்னர் அப் பதவியையும் விட்டார். தேர்தலில் தோல்வியுற்ருலும் அவர் உற்சாகத்தையோ நம்பிக்கையையோ இழப்பதில்லை.

மீண்டும் அவர் பார்லிமெண்ட் தேர்தலில் பாட்டியிடுவாரென்றே பலத்த வதந்திகள் அடிபடுகின்றன. அரசியலில் விசேஷ அனுபவமும், உற்சாகமும், அறிவாற்றலுமுள்ள இவர் போன்ற தலைவர்கள் அச்சபையில்இல்லாமற்போவது அச்சபைக்கே ஒருவித நஷ்டமென்பதை அவரது அர

நாட்களில், பலவற்றை ''கல் கண்டு'' செய்திருப்பார்

0 0 0

மிக்காணக் குறைந்தடைந்தார் மேவுலானை வெவ்வேருய்இருமூன்று சமயமாகிப், புக்கானை எப்பொருட்கும் பொதுவானுனைப் பொன்னுலகத்தவர் போற்றும் பொருளுக் கெல்லாந், தக்கானைத் தானன்றி வேருென்றில்லாத் தத்துவனைத் தடைவரையை நடுவு செய்த, திக்கானைத் திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்ருரே?

---அப்பார் அடிகள்

## நிரந்தர ஊழியர்களாக நியமிக்காததற்கு கண்டனம்

யாழ்ப்பாணம், வியா.

''பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்து 8வருடங்களாகியும், ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு நிரந்தரக் கடிதங்கள் வழங்காது, தொடர்ந்தும் தற்காலிகமாச் சம்பள ஊழியர்களாகக் கணிக்கப்படுவதால் நிரந்தர அரசாங்க ஊழியர்கள் பெற்றுவரும் உரிமைகளையும் இலவச புகையிரதச் சீட்டு, கடன் வசதிகள் முதலியவற்றையும் அவர்கள் பெறமுடியாந நிலையிவிருக்கிருர்கள். கல்வி அமைச்சின் இந்த உதாசீனப் போக்கை இச்சபை வன்மையாககக்கண்டிக்கிறது

நாளைநடைபெற விருக்கும் அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியரல்லாத ஊழியர் சங்க வடபிரதேசக் கிளைக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்படவிருக்கின்றது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்ளும்இக் கூட்டம் நாளைக் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தடைபெற விருக்கின்றது.

திரு. பொ. இரத்தின சிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் அகில இலங்கை படாசாலை ஊழியர் சங்க உபதலைவர் திரு.பி.நந்தசேனு, கண்டிப் பிரதேசக்கிளைச் செயலாளர் திரு. நிமால் திஸநாயக்கா வடமாகாண அதிபர் சங்கச் செயலாளர் திரு. திரு. இ. சபாலிங்கம்திரு. கா. மாணிக்கவாசர் ஆகியோரும் சொற் பொழிவாற்றுவார்சள்.

பின்வரும் இரு தீர்மானங்களையும் இக்கூட்டத்தில் கொண்டுவர முன்னறிவிப்புக் கெடுக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான ஆய்வுகூட உதவிளார்களின் கல்வித் தகமைக்கேற்ப அவர்களுக்குப்பதவி உயர்வும் சம்பள உயர்வும் வழங்குவதுடன் இவர்கள் நியமனத்தை பாடசாலை ஆய்வு கூடஉதவியாளர் எனமாற்ற வேண்டும்.

கல்வித் தகமை வேண்டப் படாத பதவிகளிற் சேர்ந்து கொண்ட சிற்றூழியர்களை உத்தியோக மொழியிற் தேர்ச்சி பெறவேண்டும் எனக் கட்டாயப்படுத்துவதை இச்சபை கண்டிக்கிறது. (கா. நி)

## தற்கொலை செய்ய முயன்ருராம்

### வழக்கு தாக்கல்

யாழ்ப்பாணம், வியாழன்

தற்கொலை செய்ய எத்தனித்ததாக குற்றம் சாட்டி கரையூரைச் சேர்ந்த அல்பர்ட் பெர்ஞன்டோவுக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவரது மனைவி கரையூர் பொலிஸில் செய்த புகாரைத் தொடர்ந்தே பொலிஸார் இவரைக் கைது செய்து நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றனர்.

எதிரியை பிணையில் செல்ல அனுமதித்த மாஜிஸ்திரேட் ஜனுப் ஜமீல் விசாரணையை வேறு திகதிக்கு ஒத்திவைத்தார். (கய. நி)

MANOHARA
JAFFNA
DO BADAN
முக்கிய அறிவித்தல்
தினசரி 2-30 காட்சிக்கு மட்டும், மாதர்களுக்கு எல்லா வகுப்புகளுக்கும் அரைக்கட்டணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org